

சிலம்பு ௩௪	திருவள்ளுவர் ஆண்டு ௧௯௯௦, புரட்டாசி அக்டோபர், 1959	பரல் ௨

ஓம்

திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த சங்கத்தின்
ஆதரவில் சென்னைக்கண் நிகழும்

மறைமலையடிகள் நூல்நிலையத்தின்

முதலாண்டு நிறைவுவிழா

இவ்விழா 13-9'-59, ஞாயிறு மாலை 5 மணிக்கு, இலிங்கிச் செட்டித்தெரு நூலகக் கட்டிடத்திற்குமுன் வனப்புற அமைக்கப் பெற்ற மாண்புமிக்க பந்தர்க்கீழ்த் தொடங்கப்பெற்றது. அப்பொழுது சென்னை உயர்நீதி மன்ற நடுவர் உயர்திரு, வி. சுப்பிரமணிய நாடார் அவர்கள் தலைமை பூண்டார்கள். பேரவைக்கண் கல்வி, அறிவு, ஒழுக்கம், செல்வம், முதன்மை முதலியவற்றால் சிறந்து எல்லாரும் ஒற்றுமையுடன் இலங்க விழையும் மக்களிருபாலாரும் திரளாகக் குழுமியிருந்தனர்.

திருமதி லீலா அம்மையாரால் முறையுற இறைவணக்கம் இயல்பாக அமைந்த இனியகுரலில் பண்ணோடு பாடப்பட்டது. எல்லாரும் அமைவொடும் எழுந்து ஒருங்கிய மனத்தராய்த் தமைமறந்து தொழுது நின்றனர்.

தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகத்தின் பொறுப்பாணையர் திரு. வ. சுப்பையாபிள்ளை அவர்கள் இவ்விழாவுக்கு வந்துள்ளோரனைவர்களையும் நல் வரவேற்று நன்மொழி நவின்றனர். சுருக்கம் வருமாறு: “இதுகாறும் இறையருளால் அறிஞர் பலரும் இந் நூல்நிலையத்திற்கு வந்து குறித்த நேரம்வரை தங்கிப் படிக்கவும் பலதுறை ஆய்வுகள் பாங்குறப் புரியவும் அனைத்து நூல்களும் நல்லமுறையாகப் பயன்பெற்று வருகின்றன.

இனிமேல் பொருவரும் பெருமக்கள் பலரின் புகலரிய நன்மையை நாடி அவரவர்தம் இல்லங்கட்கு எடுத்துச் சென்று நல்லமுறையாகப் படித்து நலம் பெறவும் வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. அதுவே “கொடுத்து வாங்கும் நூலகப் பகுதி” யாகும். இப்பகுதி முதற் றளத்தின்கண் அமைக்கப்பட்டுள்ளது. இதன்கண் இருபால் பெருமக்களும் திரளாகக் கலந்து நாட்டுக்கும் மொழிக்கும் நன்னெறிக்கும் நலம்புரியும்வகையான் நூல்களைக் கற்றுப் பெரும்பயன் எய்துமாறு வேண்டுகின்றோம்.

பின்னர் இவ்வுலகின்கண் தந்நிகரில்லாச் சீர்சிறப்புடன் வாழ்ந்து அரும்பெரு நூலானும், உரையானும், நுண்மாண் நுழைபுலத்திறலமை பேச்சானும், நடைநொடி தோற்றப் பொலிவானும் பலரையும் தம் வயப்படுத்திப் பின்பற்றி யொழுகுமாறு வழிகாட்டிப் பெரும்புகழ் நிறீஇப் பருவுடல் நீத்து நுண்ணுடலோடும் அதன் காரியமாகிய எண்ணுடலோடும் வானிடைப் புக்கு மறைந்து நின்று வேண்டுவ புரியும் மறைமலையடிகளார் தம்மைக் காணுவுலகவாசி யென்கின்றனர். அவர்தம் விலைவரம் பில்லா நிலைபேறும் அருங்கருத்துக்களை நெல்லைக்கண் உறையும் ஓர் அன்புமிக்க இயக்குநர் (மீடியம்) வாயிலாக அவர்தம் செவிக்கண் உணர்த்தி வரைவித்து அவ்வப்போது நமக்குத் தண்ணளியுடன் அளித்தருளுகின்றனர். அம்மட்டோ? அவரேயனைய ஞானியாரடிகள், திரு. வி. க. முதலிய பெருஞ்சான்றோர் பலரும் அங்ஙனமே தத்தம் கருத்துக்களைத் தந்தளிக்கின்றனர்.”

அம்முறையில் மறைமலையடிகளாரிடமிருந்து வந்துள்ள நூல்நிலைய ஆண்டுவிழா வாழ்த்தைத் திரு. வ. சு. அவர்கள் படித்தார்கள். இதுபோன்று காணுவுலகவாசியாகிய ஞானியாரடிகள், திரு. வி. க., வரகவி. பாரதியார், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, திராவிடக் கவிமணி வே. முத்துசாமி ஐயர், வ. திருவரங்கனார், திருவரங்க நீலாம்பிகையார் முதலியோர்களிடமிருந்து வந்த வாழ்த்துக்களும் இடையிடையே கழகத் தலைவர் பாகனேரி திருவாளர் மு. காசிவிசுவநாதன் செட்டியாரவர்க

ளாலும், திருநெல்வேலி சித்தாந்தமணி வித்துவான் திரு. வே. மாணிக்கவாசகம் பிள்ளையவர்களாலும் படிக்கப்பட்டன.

பின்னர் நூலகர் திரு. இரா. முத்துக்குமாரசாமி, எம். ஏ., டி. எல். எஸ்ஸி அவர்களால் நூலக அறிக்கை படிக்கப்பட்டது. அது வருமாறு:

"தென்னிந்திய சைவசித்தாந்த சங்கத்தினரால் தனித் தமிழியக்கத் தந்தை மறைத்திரு. மறைமலையடிகள் திருப் பெயரால் நிறுவப்பட்டிருக்கும் இந்நூல் நிலயம் இறையருளால் 24-8-'58 இல் தொடங்கி நிகழ்ந்து வருகின்றது. ஓராண்டு நிறைந்து ஈராண்டு தொடங்கியிருக்கின்றது. இந்நூல் நிலயத்தில் தற்பொழுது ஏறத்தாழப் பன்னீராயிரம் நூல்கள் தொகுத்து வைக்கப் பெற்றுள்ளன. மறைமலையடிகள் தமிழ், ஆங்கிலம், வடமொழி ஆகிய மூன்று மொழிகளிலுமாகத் தொகுத்து வைத்துள்ள நாலாயிர நூல்களும் இதன்கண் அடங்கியுள்ளன.

சென்னை மாநிலக் கல்லூரியில் வரலாற்றுத்துறைப் பேராசிரியராகப் பணிபுரிந்து காலஞ் சென்ற திரு. வி. அரங்காச்சாரியாரவர்கள் தென்னிந்திய வரலாற்று ஆராய்ச்சிக்காகத் தொகுத்து வைத்திருந்த கிடைத்தற்கரிய பல நூல்களை வெண்பொன் ஆயிரத்து எழுநூற்றைம்பது கொடுத்துப் பெற்று இந் நூலகத்து நூல்களுடன் அவைகள் சேர்த்துவைக்கப்பட்டுள்ளன.

இலக்கியம், வரலாறு, தத்துவம் போன்ற சீரியதுறைகளில் நனிமிக ஆராயும் அறிஞர்க்குப் பயன் பெரிதும் தரக்கூடிய அவ்வப்போது வெளிவரும் நூல்களனைத்தையும் இந் நூலகம் விடாது வாங்கிவைத்துக் கொண்டு வருகின்றது. இவ்வாண்டில் வெண்பொன் ஓராயிரத்து எழுநூறு மதிப்புள்ள எண்ணூற்று ஐம்பத்தெட்டு நூல்கள் புதிதாக வாங்கிச் சேர்க்கப்பட்டுள்ளன. வெண்பொன் ஐந்நூறு மதிப்புள்ள இருபத்திரண்டுக்கு மேற்பட்ட திங்கள், கிழமை இதழ்கள் ஒழுங்காக வந்துகொண்டிருக்கின்றன. இந் நூலகத்தில் நூற்றாண்டுக்கு மேற்பட்டு வெளிப்போந்த பழந்தமிழ் நூல்கள் பல இருக்கின்றன.

இந் நூலகத்தை இவ்வாண்டில் பயன்படுத்திக்கொண்டோர் தொகை பதினாலாயிரத்து எழுநூற்றுப் பதினொன்றாகும். அவர்கள் படித்துப் பயனெய்திய நூல்களின் எண்ணிக்கை ஆங்கிலம் ஓராயிரத்து ஒரு நூற்றெண்பத்தேழும், தமிழ் ஐயாயிரத்து நானூற்று எழுபத்து மூன்றுமாகும்.

இந்நூலகச் சார்பில் நூல்நிலய நுண்கலைப் பேராசிரியர் டாக்டர் எஸ். ஆர். அரங்கநாதன் அவர்களால் நூலகத்துறை

பற்றிய மூன்று அரிய சொற்பொழிவுகள் வெவ்வேறு காலங்களில் நிகழ்த்தப்பெற்றன. டாக்டர் எஸ். ஆர். அரங்கநாதன் அவர்கள் அனைத்துலக நூற்பதிவுக் குழுவின் துணைத்தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதைப் பாராட்டித் திசம்பர் பதினெட்டாம் நாள் ஒரு நல்விருந்தளிக்கப்பட்டது. அக் கொண்டாட்டத்திற்கு அண்மையில் காலஞ் சென்ற, வண்ணையம்பதித் தியாகராயக் கல்லூரி முதல்வர் திரு. ம கி. சண்முகம் அவர்கள் தலைமை தாங்கினார்கள்."

தலைவரவர்கட்கும் சொற்பொழிவாளர்கட்கும் அவ்வப்போது மணம்கமழ் மலர்மாலை சூட்டப்பெற்றது. பின்பு தலைவரவர்கள் அரியதோர் முன்னுரை நுட்பதிட்பமும், சுருக்க விளக்கமும், இனிமையும் தெளிவும் எடுத்துக்காட்டும் பொதுள ஆற்றினர். சுருக்கம் வருமாறு :

ஆசிரியர் மறைமலையடிகளார் தனித்தமிழியக்கத்திற்கும் தூய சிவநெறி வளர்ச்சிக்கும் திருவருளால் தோன்றிய ஒப்பில் பெரியார் என்பது அவர்தம் இளமைக்கால வாழ்க்கை தொட்டு ஆற்றிவந்த அரும்பெருஞ் செய்கைகளால் எவரும் நன்குணர்வர். தாம் நாகையிற் கல்வி கற்குங்கால் மேற்புலக் கிறித்துவத் தொண்டர் தம் சமயத்தை விளக்குவதும் பரப்புவதும் கண்டு தாமும் அங்ஙனம் தொண்டாற்றுதல் வேண்டுமென்று உளங் கனிந்து உறுதியாக எண்ணினர். எண்ணியாங்கு உழைத்தனர். நன்னெறிக்கழகம் கண்டனர். மாணவர்களும் பெருமக்களும் ஒருங்கியைந்து பெரும்பயன் கொண்டனர். செந்தமிழும் சிவநெறியும் தழைத்தோங்கின. அம்முறையாக வாழ்நாள் முற்றும் அவற்றிற்கே எழுத்தாலும் பேச்சாலும் அருந்தொண்டாற்றினர். ஒவ்வொருவரும் தத்தம் இளமைக்காலத்து, உண்மை உணர்ச்சியுடன் உயர்ந்த நோக்கொன்றனை உஞற்ற உறுதிகொள்வராயின் முழுமுதற் கடவுள் அந்நோக்கம் நிறைவேறுவதற்காம் ஆற்ற லினையும் சூழ்வினையையும் அளித்தருள்கின்றனன் என்பது ஆங்காங்கு நிகழும் மெய்ம்மை நிகழ்வாகும்.

எடுத்துக்காட்டாக அமெரிக்க மாநிலத்து இஞ்ஞான்று பேருட்புகழும் பிறங்கப் பீடுடன் கொண்டாடப்பெறும் ஆபிரகாம் லிங்கன் அவர்கள் பதினைந்து பதினாறகவை இளமையாக விருக்கும்போது தெருவின்கண் ஓர் அடிமை நீக்கிரோப் பெண் விற்கப்பட்டாள். அவள் விலைகொடுத்துப் பெற்றவனுடன் செல்ல இணங்கவில்லை. அவன் கடுஞ் சினமுடையவனாய்க் கசையால் குருதி பீறிடக் கொடுமையாக அடித்தனன். அதனைக் கண்டு ஆற்றொணாத் துன்பமெய்தி மனமுருகிய லிங்கன் எங்ஙன

மேனும் எவரும் எந்நிலையினும் எண்ணுதற்கும் அரிய இக்கொடிய அடிமை முறையினை அறுத்தொழிப்பே னென்று உறுதிகொண் டனர். அதற்குரிய பருவமேனும், குடும்பச்சூழ்வேனும், கல்வி செல்வம் முதலிய தகுதியேனும் அவர்க்குச் சிறிதும் அமைந்தில. எனினும் உள்ளத்துக்கொண்ட வுறுதியானே திருவருளாற்றல் உள்நின்றாக்கப் பிற்காலத்து அப்பெரிய தொண்டினை நிறை வேற்றி அடிமை வழக்கினை அடியோடு அறுத்தொழித்து முடியாப் புகழெய்தினர். இதனால் உள்ளத்துறுதியுடையார்க்குப் பேராற்றலும் பேரறிவும் பெருமுயற்சியும் திருவருளால் வேண்டி யாங்குத் துணைபுரியும் என்பதுறுதி என்பதாம்.

திரு. சனார்த்தன நாயுடவர்கள் (சென்னைப் பல்கலைக்கழக முன்னாள் நூலகர்) 'கொடுத்து வாங்கும் நூலகப்பகுதி'யினைத் திறந்துவைத்துப் பேரார்வத்துடன் பேசியதன் சுருக்கம் வருமாறு:

இதுகாறும் இந்நூலகத்துக்கு வந்து படித்துப் பயன் பெறுவதுபோன்று வீட்டிற்கு வாங்கிச் சென்று படிப்பதற்கும் வாய்ப்பளிக்கப்படுகின்றது. இம்முறை பெருமக்களுக்கு நனி மிகப் பயனளிக்குமென்பதுறுதி. ஏறத்தாழ ஐம்பதாண்டு களுக்குமுன் தமிழை இகழ்வதன்றிப் பொருட்படுத்துவாரெவரு மிரார். மாணவர்களும் தமிழையும் தமிழாசிரியர்களையும் அறவே புறக்கணித்துத் திரிந்தநாள் அந்நாள். அந்நாளிலும் மறைமலை யடிகள் தமிழ்ப்பாடம் நடத்துகிறார்கள் என்றால் மாணவர்க ளனைவர்களுக்கும் தனி எழுச்சியும், ஈடுபாடும், எவற்றினும் இல்லாத இனிமையும் உண்டாவதியல்பாகவிருந்தது. என் தமையனார் மேல்வகுப்பிலும் யான் அடுத்த வகுப்பிலும் கல்வி பயின்றுகொண்டிருந்தோம்.

எங்கள் தாய்மொழி தெலுங்கு; நாங்களும் ஏனையரும் விழைந்து கற்பது ஆங்கிலம். அங்ஙனமெல்லாமிருந்தும் எங்க ளுக்கு அடிகளார், குயிலினும் இனிய தம்மியற்கைத் தீங்குர லால் எளிமை பொதுளக் கற்பிக்குந் திறத்தால் இயற்கை இனி மைத் தமிழ்மொழிக்கண் தனித்ததோர் இன்பமும் ஈடுபாடும் உண்டாயின. எப்பொழுதும் தமிழ் வகுப்பு நேரத்தை மிக்க ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டே யிருப்போம். வீட்டிற்கு வந்தபின் நாங்களிருவரும் அடிகளாரைப்பற்றிப் பேசிப் பேசிப் பெருமகிழ்வு கொள்வோம். அந்நிலையில் அருந்தமிழ் மொழியினைத் தாய்மொழியாகப் பெற்ற உங்களுக்கெல்லாம் எங்ஙனமிருந் திருக்குமென்று யான் சொல்லவும் வேண்டுமோ? மறைமலை யடிகளின் மாண்பினுக்கிரங்கி இக்கூட்டத்திற்கிடையூறாக மழை

வராதிருக்க இறை அருள் புரிவன் என்பது உறுதி. என்னை? அவன் நந்தனர் வேண்டுகோளின்படி தன் திருவுருவினை நேரே காணுவதற்கு நந்தியை விலகியிருக்கத் திருவருள் புரிந்தமையா னென்க. வழக்கமாக வந்துகொண்டிருந்த மழையும் அன்று வாராது நின்றது. தக்க பெரியவரைப் பற்றிப் பேசாத நாளெல்லாம் பிறவா நாள் என்று கருதுதல் வேண்டும். பெரியவர்களை இறைவன் அருளாளர் என்று கருதுதலே நம் நாட்டு வழக்கு. அந்நிலையில் நாம் மறைமலையடிகளைப் பற்றிப் பேசாத நாளெல்லாம் பிறவா நாளென்று கருதுவோமாக. அடிகளார் அல்லும் பகலும் ஆண்டவனிடம் வேண்டியது தமிழர் முன்னேற்றமொன்றே.

மேனாட்டு நூல்நிலையங்களில் படிப்பவர்கள் எந்நூலை எப்பொழுது படித்தாலும் அந் நூலாசிரியர்களையே கருத்திலும் கண்ணிலும் கண்டுகளிக்கின்றனர்; உறவாடுகின்றனர்; உணர்வு பெறுகின்றனர்; உணர்ச்சி யெய்துகின்றனர். அதுபோல் நாமும் மறைமலையடிகள் போன்ற மாண்புமிக்கார் நூல்களை மன வெழுச்சியுடன் படிக்குங்கால் ஆவோம் என்பது உறுதி. நூல் நிலையங்களால் கல்வியறிவும் உளத்தூய்மையும் கணக்கின்றி ஓங்கிவளரும். இந் நூலகத்திலுள்ள மறைமலையடிகளாரின் நூல்களைக் கண்ணுறுவார் நூல்களைக் கற்கும்முறை, காப்பாற்றுமுறை, குறிப்பெழுதுமுறை முதலியவற்றை நன்குணர்வர். நூலகப் பகுதியை வாழ்த்துவதுடன் நிறைவு செய்தனர்.

அடிகள் புதல்வர் மறை. திருநாவுக்கரசு வரைந்துள்ள "மறைமலையடிகள் வரலாறு" என்னும் நூலை டாக்டர் அ. சிதம்பர நாதன் செட்டியார், எம். ஏ., எம். எல். சி. வெளியிட்டுப் பேசியது பின் வருமாறு:

"அடிகளார் பெயரில் அமைக்கப் பெற்ற இந்நூல் நிலையம் சிறந்த அறிவுச் சுரங்கமாகத் திகழ்கின்றது. மேலும் மேலை நாட்டுப்பல்கலைக் கழக நூலகங்களுடன் ஒப்பிடக்கூடிய வகையில் அனைத்துமுறையிலும் சாலச் சிறந்து தனிமாண்புடன் விளங்கு கின்றது. மறைமலையடிகளாரை நம்மில் பலர் இன்னும் புரிந்துகொள்ளவில்லை. கற்றவர்கள்கூட அடிகளாரை நாம் ஏன் போற்றுகின்றோம் எனத் தெரியாதவர்களாக இருக்கின்றார்கள். தமிழ்மொழி தன்னிகரில்லாதது, அது தனியொரு முதல்மொழி, பிற மொழிகளின்வழி வந்ததல்ல என்பதனை உணராது உறங்கிக் கிடந்த தமிழர்களை உண்மை உணர்ந்து தலைநிமிர்ந்து நிற்கும்படி செய்தவர் மறைமலையடிகளேயாவர். பிற மொழிகளின் கலப் பின்றித் தமிழ்மொழி தனித்தியங்கக் கூடியது—தனித்தியங்க முடியும் எனக் காட்டியவர் ஒப்பில்ஒருவராம் மறைமலையடிகளே.

தமிழ் மொழியிலிருந்து வடமொழி தேவையான மட்டும் சொற்களைக் கடன் வாங்கியுள்ளது என்று முன்பு அடிகளார் கூறியதை உலகம் ஒப்புக்கொள்ளத் தயங்கியது. அது மட்டுமல்ல, அடிகளாரின் எழுத்திலும் பேச்சிலும் வடமொழி கலந்திருப்பதாக வழக்கிட்டனர் பலர். ஆனால் உண்மையில் வடமொழியில்தான் ஏராளமான தமிழ்ச் சொற்கள், திராவிடச் சொற்கள் கலந்துள்ளன. இதைச் சுனிதகுமார் சட்டர்ஜி போன்ற அறிஞரும், ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகப் பேராசிரியர் பரோவும் ஒப்புக்கொண்டுள்ளனர். சென்னைப் பல்கலைக்கழக நூலகத்தில் 'சமஸ்கிருத மொழி' என்ற பெயரில், பேராசிரியர் பரோ எழுதிய நூல் ஒன்று உள்ளது. அதில் வடமொழி எந்தெந்த மொழியிலிருந்து சொற்களைக் கடன் வாங்கி வளமாகி யுள்ளது என்பது யாவர்க்கும் எளிதாக நன்கு தெரியும். அருளும் ஆற்றலும் மிக்க ஆண்டவனுக்குத் தமிழ் புரியாதா? விலக்குண்ட மொழியாகுமா? ஆண்டவனைத் தமிழில் வழி படுதலால் யாது குறையுறும்? அன்றே அடிகளார், நாட்டிலும் வீட்டிலும், அரசியலிலும், தமிழ் ஆட்சி செலுத்தவேண்டு மென்றும், கடவுளைத் தமிழில் எண்ணி, சொல்லி, வழிபட முடியும் என்றும் கூறினர். ஆனால் அவர் கூற்றை அன்றைய நிலையில் பலர் புரிந்து கொள்ளவில்லை. அடிகளார் பார்ப்பனப் பகைஞர் என்று பலர் தவருகக் கருதுகின்றனர். தமிழ் மாண்பினை ஒப்புக்கொண்ட எந்தப் பார்ப்பனரையும் அடிகளார் வெறுத்ததில்லை. சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தில் போட்ட நூல் என்றால் அதில் ஒரு பிழைகூட இராது என்ற எண்ணம் நாடெங் கும்பரவி வருகின்றது. அடிகளாரின் மகனர் எழுதிய இந்நூலில் அடிகளாருடைய பலவகை நிலையில் உள்ள படங்கள் பாங்குற மிளிர்கின்றன. நம்மை நல்வழியில் செலுத்த இந்நூல் நன்கு உதவும். அடிகளார் உலகைவிட்டு மறைந்த பின்பாவது அவர் கருத்தை எல்லோரும் ஒப்புக்கொண்டனர் என்பதை இந்நூல் காட்டுகின்றது. இந்நூலில் ஓர் ஏடு போனாலும் எந்நூல் என்று நன்கு தெரியும் வண்ணம் இக்கழகத்தார் இந்நூலை மிக விழிப்பாக வெளியிட்டிருக்கின்றார்கள். திரு. கா. சு. அவர்கள், திரு. வி. க. அவர்கள் முதலியோர் அடிகளை எவ்வாறு போற்றி னர்கள் என்று விளக்கமாக இதில் கூறப்பட்டிருக்கின்றது.

பண்டிதமணி அவர்களுக்கும். அடிகளாருக்கும் அன்று ஏற்பட்ட சொற்போர்மேடையில் இருந்தவர்கள் சிலர்கூட இப் பொழுது இங்கே அல்லது பிற இடங்களில் இருப்பார்கள்.

'நாட்குறிப்பு' என்பது நம் சைவசித்தாந்தக் கழகத்தார் முதலில் நாட்டில் வழங்கிய ஒரு சொல். அடிகளார் எழுதி

வைத்திருந்த நாட்குறிப்புக்களிலிருந் தெடுத்தவையும் பிறவும் சேர்த்துத்தான் திருநாவுக்கரசு அவர்கள் திரட்டி இந்நூலை எழுதியிருக்கின்றார்கள். அடிகளாரின் நல்ல திருமகனாராலே— திருநாவுக்கரசனாராலே 'மறைமலையடிகள் வரலாறு' என்னும் இந் நூல் நன்கு பெருமைப்படுகின்றது. இந்நூல் பலவகைச் சிறப்புக்கள் கொண்டிருப்பதால், கொட்டை எழுத்துக்களில் நன்முறையில் அருமைப்பாடுகளுடன் வெளியிட்டிருப்பதால் இதன் விலை மிகுதி என்று யாரும் நினைந்தல் கூடாது. மறைமலையடிகளாரவர்கள் தமிழுக்கே, தமிழ்நாட்டுக்கே, தமிழ் மக்களுக்கே பெருமை தந்தார் என்றால் அது மிகையன்று."

அடுத்து, சி. இராமலிங்கனூர், எம். ஏ. அவர்கள் பேசியதன் சுருக்கம் வருமாறு :

"மறைமலையடிகளாருடைய பெருமையாக இருப்பது தமிழைப்பற்றிய உண்மைதான். தமிழ்மொழி இன்னொரு மொழியிலிருந்து தோன்றியது, இன்னொரு நாகரிகத்தில் இருந்து தோன்றியது என்று தப்பான ஒரு கருத்து நிலவி வந்தது. நமக்கு மட்டுமல்ல, தமிழ், உலகுக்கே தாய்மொழி எனப் பிற மொழியாளரும் தமிழைப்பற்றிய இவ்வுண்மையைக் கூறுவது தான் நமக்கு மகிழ்ச்சி.

மறைமலையடிகள் என்று தம் பெயரையே மாற்றிக்கொண் டவர்கள் அடிகள். ஒரு காலத்தில் தமிழ்ப் பெயரையெல்லாம் வடமொழிப் பெயராக மாற்றுவது என்று ஒரு நிலை நிலவி வந்தது. மறைக்காடு என்ற தமிழ்ப் பெயர் வேதாரணியம் என்ற வடமொழிப் பெயராயிற்று. முதுகுன்றம், விருத்தாசலம் ஆயிற்று. மயிலாடுதுறை மாயூரம் என்றாகிப் பின் மாயவரம் ஆகிவிட்டது. அங்கு வீற்றிருக்கும் இறைவி அஞ்சொல் நாயகி, அஞ்சல்—அபயம் என்றுகொண்டு அபயாம்பிகை என்று பேரை வைத்துவிட்டார்கள். நல்ல பண்புகளை—நல்ல பெயர்களை அடியோடு மாற்றிவிட்ட போக்கு இருப்பது கண்டபோது யாருக்குத்தான் மனம் பொறுக்கமுடியும்? வேற்றுமைகள் ஏன் என்ற எண்ணங் கொண்டுதான், உண்மையை உணர்த்து தற்கு ஓர் எடுத்துக்காட்டாகவே அடிகளார் தம் பெயரையே மாற்றிக் கொண்டார். சங்கராச்சாரியார் அடிகளாரின் வட மொழியறிவை நன்கு பாராட்டியிருக்கின்றார். தமிழ்நடையோடு கூடப் பிற சொற்கள் சேர்ந்து அதன் பயனாக மலையாளம் ஒன்று தோன்றிற்று. தெலுங்கு தோன்றிற்று. கன்னடம் தோன் றிற்று. இவையெல்லாம் தமிழ்தான். ஒவ்வொரு மொழிக்கும் ஒரு தனிச் சிறப்பு உண்டு."

பிறகு, காஞ்சுவுலகவாசிகளாகிய, திரு. திருவரங்கனார், திருவாட்டி நீலாம்பிகை அம்மையார், திராவிடக் கவிமணி, வே. முத்துசாமி ஐயர் ஆகிய மூவரிடமிருந்து வந்த வாழ்த்துச் செய்திகளை வித்துவான் திரு. வே. மாணிக்கவாசகம் பிள்ளையவர்கள் வாசித்தார்கள்.

பின்னர், பேராசிரியர், அ. மு. பரமசிவானந்தம், எம். ஏ., எம். லிட். அவர்கள், பேசிய சுருக்கம் வருமாறு :

"எங்கோ திசை தெரியாமல் சென்றுகொண்டிருந்த தமிழ் நாட்டை நன்னிலையில் திருப்பிக்கொண்டு வந்தவர்கள் நம் மறைமலையடிகளாரவர்கள். தேர்ச் சக்கரத்துக்குக் கொடுக்கும் இருசுக் கட்டைபோல் முட்டுக்கொடுத்துப் பல பெரியார்கள் நன்னிலைப் படுத்துகின்றார்கள்.

தொல்காப்பியருக்கு அவருடைய தாய்தந்தையர் இட்ட பெயர் நமக்குத் தெரியாது. ஆனால் மறைமலையடிகளுக்குத் தாய் தந்தையரிட்ட பெயர் வேதாசலம் என்பது நமக்குத் தெரியும். அப்பெயர் மறைந்துவிட்டது. கம்பருக்கு அவருடைய பெற்றோர் வைத்த பெயர் நமக்குத் தெரியாது. பெற்றோர் இட்ட பெயர் அழிந்து போனாலும் தமிழ்மக்கள் இட்ட பெயர் என்றும் அழியாது. தொல்காப்பியரின் பெயர் ஒல்காப் பெரும் பெயராக வளர்ந்து வருகின்றது. தமிழ்நாட்டிலே தனித்தமிழ் என்று சொல்கின்ற அளவுக்குத் தமிழ்நாட்டின் நாகரிகம் இருக்கின்றது. அதைக் களைய வேண்டிய பொறுப்புத் தமிழன் கையில் இருக்கின்றது. காலமும் இடமும் வாலிதின் நோக்கிக் களைந்துதான் வருகின்றார்கள். நம்முடைய நாட்டில் தமிழ் மொழியைப்பற்றியும், தமிழ் நயம் பற்றியும், பண்பாட்டைப் பற்றியும், நம்மொழியிலேயே எழுதுகின்றார்கள். ஆங்கிலத்தில் வல்லவர்கள் அவை பற்றி ஆங்கிலத்தில் எழுதினால் மேனாட்டாரும் வியப்படைய நேரிடும். டாக்டர் அ. சி. செட்டியார் அவர்கள் நல்லதொரு தனிப் பொறுப்பு வாய்ந்த நிலையினை, ஏற்றிருக்கின்றார்கள். 'தமிழர் என்றால் விளிம்பில்லாப் பாத்திரம்' என்று முன் எழுதியது போன்று எழுதாமல் நன்முறையில் தொண்டாற்றுவார்கள் என்று எதிர்பார்க்கின்றேன். ஆங்கிலமும் தமிழும் கற்றவர்கள் இங்கு வீற்றிருக்கின்றார்கள். அவர்கள் தமிழைப்பற்றித் தமிழில் ஆயிரம் பக்கம் எழுதுவதைவிட ஆங்கிலத்தில் ஐந்து வரிகள் எழுதினால் போதும். சிறிது முன்புதான் திரு. வ. சு. அவர்களிடம் 'மறைமலையடிகளாரின் ஆங்கில முன்னுரைகளை யெல்லாம் திரட்டி ஆங்கிலத்தில் ஒரு நூல் வெளியிடுங்கள்' என்று சொன்னேன். தமிழன் உறங்காத நிலையில் நீறுபூத்த நெருப்புப்

போல் இருக்கின்றன். சங்க இலக்கியத்திலே வரும் 'தேய்புரிப் பழங்கயிற்றினர்' 'ஓரேருழவனர்' என வரும் தொடர்ப்பெயர்கள் போல மறைமலையடிகளார் பெயரும் என்றும் வாழும்."

அடுத்து, திரு. இரா. பாலகிருட்டிண முதலியார், பி.ஏ. எல்.டி., அவர்கள் பேசிய சுருக்கம் வருமாறு :

"இவ்விழாவில் கலந்துகொள்ள எனக்கு வாய்ப்பளித்த திரு. வ. சுப்பையா பிள்ளை அவர்களுக்கும், இக்கழகத்தைச் சார்ந்த பிறருக்கும் என் நன்றி. நான் அடிகளாரைப்பற்றி மிகக் காலம் தாழ்த்தே அறிந்தேன். அஃதாவது 1938-இல்தான் என்று உங்களிடம் நாணத்துடன் சொல்லிக்கொள்கின்றேன். இந்தி மொழித்திணிப்பு வந்ததே இதற்குக் காரணம். தமிழர் தம் தாய்மொழியைப் புறக்கணித்ததன் காரணமாகவன்றோ இந்நிலை வந்துற்றது என்று கண்டு பின்பே அடிகளாரின் நூல்களைப் பயிலத் தொடங்கினேன். பின்பு நான் தலைமை ஆசிரியனாகச் சென்று பணியாற்றிய இடங்களிலெல்லாம், சுற்றறிக்கைகள் அனுப்பும்பொழுதெல்லாம் தமிழிலேயே அனுப்பிக்கொண்டிருந்தேன். இதுபோன்ற பணிகளாற்றச் சில இடங்களில் எதிர்ப்புக்கள் இருக்கத்தான் செய்யும். அதற்காக அஞ்சுதல் கூடாது. துணிவுடன் பணியாற்றத்தான் வேண்டும். தமிழோடு ஆங்கிலமும் தெரிந்தவர்கள் ஆங்கிலத்தில் எழுதி மேனாட்டாரும் அதன் பெருமையை உணரச் செய்யவேண்டும் என்று பலர் சொல்கின்றார்கள். அடிகள் மும்மொழி வல்லார். நானும் சங்கப் பாடல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வைத்திருந்ததை மூன்று பகுதிகளாகச் சைவசித்தாந்தக் கழகத்தார் வெளியிடுகின்றார்கள். இரண்டு பகுதிகள் வெளிவந்துவிட்டன. மூன்றாவது பகுதி அச்சாகிக்கொண்டிருக்கின்றது. 'இளங்கண்ணன் நினைவு மலர்' என ஒரு தமிழ்நூலும் என்னால் எழுதிவைக்கப் பட்டிருந்தது; திரு வ. சு. அவர்கள் முயற்சியால் கழக வழியாக வெளிவந்துள்ளது. பாரதியாரின் குயில் என்ற சிறந்த கவிதையையும், பாரதிதாசனாரின் சில கவிதைகளையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வைத்திருக்கின்றேன். இதுபோன்ற மக்களுக்குப் பயன்படும் நூலகங்களை அரசாங்கம்தான் வளர்க்க வேண்டும் என்று காத்திருப்பதில் பயனில்லை. மக்களே வளர்க்க முன்வரவேண்டும். திருமணங்கள் நடத்துவோர் திருமண நினைவாக ஒரு பகுதியை இவைபோன்ற செயல்களுக்கு ஒதுக்க வேண்டும்."

அடுத்துத் திரு. க. அன்பழகன், எம்.ஏ., எம். எல். ஏ. அவர்கள் பேசிய சுருக்கம் வருமாறு:

"இந்தி பொது மொழியா?" என்ற வினாவில் அடிகளார் நூலின் பயன்தான் இராசகோபாலாச்சாரியாரவர்களால் அன்று மறுக்கப்பட்டு இன்று ஏற்கப்பட்டு இந்தி எதிர்ப்பாக வளர்ந்து இன்று பாராளு மன்றத்தில், நேருவால் ஓரளவாவது 'இந்தி மட்டும்தான் பொதுமொழி ஆகவேண்டும் என்று சொல்லவில்லை' என்று சொல்லக்கூடிய அளவுக்கு ஆக்கமாகியிருக்கின்றது. மறைமலையடிகள் உண்மையாகவே சில புராணங்களை இந்த நாட்டிற்குத் தேவையில்லை என்று ஒதுக்கியவர். சில புராணங்களைச் சைவ சமய ஆராய்ச்சிக்காக எடுத்துக்கொண்டனர். இந்த நூல்நிலையத்தை அமைச்சர் பக்தவத்சலம் அவர்கள்தாம் திறந்துவைத்ததாகச் சொன்னார்கள். அவர்கள்தாம் 'தமிழில் அர்ச்சனை செய்தால் எனக்குப் புரியவில்லை' என்று இன்று சொல்கின்றார்கள். 'மறைமலையடிகள் தமிழ் தமிழா?' என்று கேட்கின்றவர்களும், 'நான்கு திருக்குறள்களையும், நான்கு சங்க இலக்கியப் பாடல்களையும் சடசட என்று ஒப்புவித்துவிட்டுத் தமிழ்ப் பேராசிரியர்கள் என்றும், தமிழாசிரியர்கள் என்றும், இலக்கிய ஆசிரியர்கள் என்றும் பெயர் வைத்துக்கொண்டு நாட்டில் நடமாடிக்கொண்டிருக்கின்றார்கள்' என்று எழுதக்கூடியவர்களும் இன்னும் சில நாட்கள்தாம் இங்ஙனம் செய்ய முடியும். தாம் அறிவுப் பஞ்சமுடையவர்கள் என்பதை அவர்கள் உணராமல், சில செய்தித்தாள்களில் எழுதியே வயிறு வளர்க்க வேண்டும் என்ற நிலையில் இருப்பதால் வந்த நிலையே இது. மறைமலையடிகளாரவர்கள் ஆராய்ச்சித்திறன் உடையவர்கள். எழுத்துவன்மை உடையவர்கள். சீர்திருத்தக் கொள்கைகளைச் செப்பமுறப் பரப்பியவர்கள். நான் இங்குப் பேசியதில் நேரம் கடந்திருக்குமானால், இங்கு வீற்றிருக்கும் தலைவராகிய நடுவரவர்கள், ஏற்கெனவே குற்றங்களை மன்னிக்கும் இயல்பால் என்னையும் மன்னிக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன்."

திரு. வ. சுப்பையா பிள்ளை அவர்கள் நன்றி கூறவும், தாய்மொழி வாழ்த்துடன் கூட்டம் 9-15 மணிக்கு நிறைவுற்றது.

நீங்காக் கலைபயில் நீள்களமாம் நூல்நிலையம்
ஓங்கு மறைமலையார் ஒண்பெயரைத்—தாங்கிவளர்
இந்நூல் நிலையமும் எம்மான் திருவருளால்
எந்நாளும் வாழ்கநலம் ஈந்து.

திருச்சிற்றம்பலம்.

திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த சங்கத்தின்
ஆதரவில் நடைபெறும்

சென்னை மறைமலையடிகள் நூல் நிலையத்தின்

முதலாண்டு நிறைவு விழா

வாழ்த்துரை

(காணுவுலக வாசியாய்நின் றியக்குநர்வழி, கழக, சங்கவமைச்சரின் விருப்பினால், மறைத்திரு மறைமலையடிகள் வரைந்த வாழ்த்துரை.)

நோக்காளர்களே!

முதலிலொன்றினை மொழிய விழைகின்றனம். தமக்கும் இவ்விழாத் தலைவருக்கும் இதுவொரு வியப்பினை அளிக்கு மென்பது மறுக்கற்பாலதும் மறத்தற்பாலதும் அன்று, எங்ஙனே, இக்கூற்று மெய்ம்மையெனக் கொளல் அறிதற்பாலது? அதனை அறிந்தபின் அக்கூற்று வியக்கற்பாலதேயென வுள்ளத்தொரு கருத்துதித்தல் இயற்கையே. சான்றுடன் அதனை விளக்கத் தோற்றிய நூல்கள் நம் நாட்டிலே நிறைந்துள. மேலை நாட்டினர் இன்று எத்துறையில் இதனைச் செயல்படுத்துகின்றன ரென வுளகருத்தும் நூல்கள் வாயிலாகவும் அறிதலே சிறந்தது.

தன்னிகரில்லாத் தலைவரே!!

இன்றைய, நூல்நிலையத்தின் முதலாண்டு நிறைவிழாவுக்குத் தம்போன்ற சட்ட வல்லுனரமைத லென்பது இந்நூலகத்தின் வளர்ச்சிக்கோருறுதுணையும், வாய்ப்பு மென்பதனைக் கருத்திற் கொளல் சாலச் சிறந்ததெனக் கழிபேருவகை யெய்தினம், யாமாகிய தாம் காணுவுலகவாசி மறைமலை. மேலும் இத் தருணத்தில் எமக்குமோர் வாய்ப்பு. எம்சிந்தையி னினைவாய்க் கொண்டமைத்ததோர் நூலகமாம், மறைமலையடிகள் நூல் நிலைய முதலாண்டு நிறைவு விழாவாகிய இன்று தமது தலைமையின்கீழ் ஒரு வாழ்த்துரை வரைந்தளிக்க விரும்பிய செயலாம், சங்க வமைச்சர் திரு. சுப்பையா பிள்ளையின் வேண்டுகோள். பிறர் தமக்கு விருப்பினையளியா. என்னையெனின், அவர் பெயராம் நூலகத்திற்கு அன்னவரே, வாழ்த்தளித்த லென்பது நெறியா என்றதோ ருணர்வுதோன்றலே. இருப்பினும் எமக்கித் தருணம், தம் தலைமையின்கீழ் வாய்த்தது, திருவருட்டிறனே யென்றவனை வழுத்துகின்றேம்.

சங்கச் செயற் குழுவினரே !!!

நுங்கள்தம் பணியாம் இந்நூலக வமைத்தலை வரவேற்கின்றேம், கடமைப்பட்டுள்ளேம். இருப்பினும் நுங்கள் தமக்கு இக்கருத்தெழுந்தது கற்றறிதலென்றதோர் கருத்தே நற்கருத்தாயமைந்ததை உன்னி நோக்குங்கால், எம்மிறை இக்கருத்தளித்தது, தெய்வப்புலவரின் திருவிளக்கம் பொதுமறையேயென யாமறிகின்றனம். இதனையே திருவள்ளுவர் பொருட்பால், கல்வி யென்ற தலைப்பின்கீழ் தந்ததாய தோர்

> " தாமின் புறுவது உலகின் புறக்கண்டு
> காமுறுவர் கற்றறிந் தார்"

என்ற மொழியின் கருத்தாம், தாம் இன்புறுவதற்குறுதுணையான, செல்வமாம் இரண்டினுள் கல்விச் செல்வத்தால், உலகமும் இன்புறுவதைக் கண்டு, கற்றறிந்த அறிஞர் மென்மேலும் அக் கல்வியையே விரும்புவரென்பது சரியெனக் கண்ட பின்னரே, நுங்கள் தம் கருத்தில் இங்ஙனையோர் நூலகமமைத்தீ ரென்றதே எம்முள் ளெழுகின்றது, தாம்பெற்ற பேற்றினை இவ்வையத்து வாழ்வாரும் பெறுக என்றதோர் உயர் கருத்து உதித்துச் செயல்பட்டதனை வரவேற்கின்றேம். நூலகமென்ற ஒன்றினால், வேண்டிய கருத்தினை வெவ்வேறு நூற்கள் வழியுற்றாய்தல் ஞாலத்து மக்களுக்கோர் அறிவினை எடுத்தோதவோர் வாய்ப்பெனக் காணலும் அதனைச் செயல்படலும் நன்றே. மேலும் இந் நூலகத்திற் கெளியனும் எம் பெயரை இட்டு எம்மை நினைவுகொளச் செய்வான் செய்த செயல் திருவருட்டிறனே யெனக் கொண்டு இறையை ஏத்துகின்றேம்.

தமிழினமே நம் முன்னோர் கண்டுரைத்ததோர் உயரினமாயின. தமிழை ஏத்துதலென்ற கொள்கையுடைத்தென்ற கருத்தெழுந்து வரைந்த நூல்களைத் தொகுத்தலென்பதே எனவுள கருத்தும், பிறமொழியினறைந்த கருத்தறி நூற்களைத் தொகுத்து இரண்டையுமொருங்கியைத்து உற்று நோக்குதற்கோர் உறுதுணையாயிருப்பது நூலகமே யென்ற கருத்தியையப் பெற்றே இந்நூலகத்தைத் திறம்பட அமைத்தீரெனவுமுள்ளதோ ரெண்ணமும் எம்முள்ளெழுகின்றன. இந் நூலகம் பல்லாண்டிப்பாரினில் விளங்குதல் திறனே யென்றதோர் நற்கருத்து உங்களுள்ளிலே யெழுந்து, அதற்குரிய திட்டங்களை வகுத்துச் செயற்பட அரியதோருறவாம் கூட்டுறவினை யென்றுமே உங்களுள்ளிலே நின்றிலங்கத் திருவருளே துணை செய்வானென்று அவனையே வணங்கி வாழ்த்துகின்றனம். இந் நூலகம் சென்னையிலோர் எடுத்துக்காட்டாக என்றுமே நின்றிலங்கத் தக்கதாயதோர் கருத்தோர் கருத்தே நுங்கள்

சிந்தையிற் றனியொரு கருத்தாய், யாமமைத்த நூலகத்தின் வாய்ப்பு, பயனுறு வழியாய் இப் பாரிலுளோர்க் கென்றுமே, தடையதின்றி யுறுதுணை செயலே சிறந்ததெனக் கருத்தெழ, எம்மியக்குநர்வழி வேண்டி விரும்புதற் றெரிவிக்கின்றனம்.

சென்னையம்பதியுறை செல்வர்காள் !!!!

நுங்களுக்கு யாமாகிய மறைமலையடிகளோர் வேண்டுகோள் விடுத்தல் சாலச் சிறந்ததெனக் கருத்துட் கொண்டு கல்வி யுடையாரே, கண்ணுடையரென்பதைக் கருத்திற்கொளல் நன்று அதற்குறுதுணையா யமைவது நூற்களே. எல்லா நூற் களையும் ஒருவன் விலை கொடுத்து வாங்குதல் எளிதல்ல என்ற கருத்தினையே கொண்டு நூலகமே இதற்குறுதுணை செய்வ தெனக் கருத்துட்கொண்டு ஒய்வு கிட்டும் சமயத்து நூலகத் தின்கண் போந்து, வேண்டிய நூற்களைக் கற்றறிதல் சாலச் சிறந்ததெனக் கருத்துட்கொண்டு கற்றாய்தல் கருத்தென வுணர் விலோ ரொளி யுதித்தல் நன்றென வேண்டியும் கீழ்தரும் புறநானூற்றுப் பாவினை அறிவான் விரும்பி வரைகின்றனம்.

"உற்றுழி யுதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே
பிறப்போ ரன்ன உடன்வயிற் றுள்ளுஞ்
சிறப்பின் பாலால் தாயுமனந் திரியும்,
ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்
மூத்தோன் வருக என்னாது அவருள்
அறிவுடையோன் ஆறு அரசுஞ் செல்லும்,
வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளுங்
கீழ்ப்பால் ஒருவன் கற்பின்
மேற்பால் ஒருவனும் அவன்கட் படுமே"

கல்வியையுங் கற்றாரையும் உயர்த்திச் சாதியுயர்வினைக் கீழ்ப்படுத் துரைத்தமை கற்றறிதலுக்கோர் பெருஞ் சான்றாய் விளங்குகிற தன்றோ? சென்னையம்பதியுறை செல்வர்காள்! நீங்க ளிப்பாவினை யுற்றாய்ந்தால் நூலகம் எத்துணைச் சிறப்பு வாய்ந்ததென நும் மனத்து விளங்குமென்ற வேண்டுதலுடனும், நோக்காளர்களாய அன்பர்கட்கும், தந்நிகரில்லாத் தலைவருக்கும், செயற்குழுவி னர்க்கும் வணக்கம்செய்து, திருவருளே, இந் நூலகம் பல்லாண்டு, செழித்து வளர்மதிபோல் வளர்ந்துவரக் கருணை செய்வாளென எமக்குட்கொண் டன்னவளை வழுத்துகின்றேம்.

ஆங்கில நாள் 13—9—59 } நாம் காணுவுலக வாசி, நெல்லை. இயக்குநர்வழி வரைந்த மறைத்திரு மறைமலை.

இயற்கை

ஆங்கில நாள் 19—9—59 மாலை 6 மணி சமய அளவில் அடிகளாம் மறைமலை இயச்குநராமிளையனிட முரைத்த கூற்று. இளையனே, தம்பி! உரைக்கின்ற கருத்தினை யுற்று நோக்கு. அன்பர் திரு. சுப்பையா பிள்ளைக்கும் அனுப்பு.

கருவுற்ற நாள் முதலாகவும் அன்னையின் வயிற்றிலோர் கருவாக வுதித்த நாள் முதலாகவும் எவ்வினங்களு மெதனை நம்பி வாழ்கின்றன, வாழ்கின்றனர், வாழ்ந்தன, வாழ்ந்தனரென, சிந்தையிற் றரித்தலே கூற்று. ஆண்டவனென்றொருவன் நம்மைக் காக்கும் சத்தியுடையனென்ற நம்பிக்கையிற்று னென்ற கருத்துட் கொண்டல்லவோ? வாழ்ந்தன, வாழ்ந்தனர், வாழ்கின்றன, வாழ்கின்றனர். இயற்கையென்ற ஒன்றினைக்கொண்டே உயிர்கள் பிறத்தலும் இறத்தலும் தொடர்ந்து செயலாற்றப் படுகின்றதென உரைக்கு மன்பரும் இவ்வுலகிலுள்ளா ரென்பதுவும் இல்லையென வுரைக்கவியலுமோ? அற்றேல், இருந்து இருந்து தோன்றினன் ஒருவன் இயற்கையை எய்தினனென்ற கருத்து உதித்துரைக்கும் கொள்கை யெங்ஙனே? சிந்திமின்! நோக்குமின்!! இயற்கை யென்ற ஒன்றே பிறப்பிற்கும், இறப்பிற்கும், (தோன்றற்குப், மறைதற்கும்,) ஒரு பொருளாயமைந் திருப்பின், இயற்கையே யளித்ததொன்றினுக்கு, மறைத்தலென்ற ஒன்று ஒரு நியதிக்குட்படாது, பலப்பல விதத்தில் பலப்பல சமயத்து நேருவதென்னை? சிந்திமின்! சிறக்கவாயுமின்!! அவ்வியற்கையே தனியொரு பொருளாய் அமைந்திருத்தலென்பது சரியா? நோக்குமின்! உலகத்துவாழ் சகல வுயிர்களுக்கும் இயற்கையென்ற ஒன்றே இருக்கிறதெனவுள்ள கருத்துதித்தால் அவ்வியற்கையின் தொழிலிலே பாகுபாடு காண வழி வகுத்ததென்னை? இயற்கையே தனியதோரொன்று யமையின், மானிட இனம் செல்வரெனவும், வறியரெனவும் பாகுபடுத்த வழிவகுத்த தன்மையென்னை? காணும் உலகியலின் படி மங்கை கருத்தரித்தாள்; மாதா வுடல் சலித்தாள்; மங்கை நல்லாள் பத்தாம் திங்களிலே தோற்றுவித்தா ளொரு உருவினை யுலகுக்கு. அவ்வுரு, ஆணோ, பெண்ணோ, அலியோ, அல்லையேல், குருடோ, முடமோ, அல்லையேல், உருவற்ற ஒரு பொருளோ என்ற ஏதாவதோருருவிற் றோன்றுகின்றதனை யாம் காண்கின்றோமல்லமோ? மேலும் ஒன்றினை மொழிகின்றனம். இயற்கையென்ற ஒன்றினுக்கு இச் சத்திகள் அளிக்க வாய்ப்பளித்ததென்னை? கதிரவன் கிழக்கிலுதிக்கின்றான்; மேற்கில்

மறைகின்றான். அதுபோல் இயற்கையே, அத்தொழிலைக் கொண்டு நடத்துமானால், இங்ஙனே, இயற்கை தோற்றுவித்தாய தோர் மக்கள் பிராணிகளிலே பாகுபாடு வகுத்ததெங்ஙனே? எங்ஙனம் பொருந்தும்? இவ்விடத்துத்தான் சிந்தனைத் திறன் தேவையென்பதைக் கருத்துட்கொளல் நன்றன்றோ? பார்மின்கள்! இயற்கையென்ற ஒன்று, ஒன்றினையே குறிக்கோளாகக் கொண்டு நடைபெறுதலல்லவோ? அவ்வியற்கை யென்ற ஒன்றினுக்கு இவ்விதம் பாகுபா டியக்கச் சத்தி வந்ததெங்ஙனே? ஆய்மின்! ஆய்வாளரே! இன்னமும் உரைக்கின்றனம். கல்வியறிவிலும் சொல்வன்மையிலும் சிறந்தாரொருவர் ஓரவைக் களத்தேறிக் கடவுளின் அளவிறந்த ஆற்றலையும், அவர் எண்ணிறந்த உலகங்களையெல்லாம் வான்வெளியிற் பந்துகள்போல் அவைகளைச் சுழற்றுதலையும், அவ்வுலகங்கள் ஒவ்வொன்றிலும் உள்ள எண்ணிறந்த உயிர்களுக்கும், எண்ணிறந்த வியத்தகும் உடம்புகளைக் கொடுத்து அவற்றால் அவர் அவை தமக்கு அறிவு விளங்கச் செய்துவரும் அருட்டிறங்களையும் நாம் நம் கண்ணெதிரே காண்பதுபோல் எடுத்துரைத்து, நம் அறிவையும் அன்பையுங் கவர்ந்து சென்றக்கால், நாம் அதனால், அவர் வயமாகி அவரைப்போற் பேசவும் அவரைப்போற் கைகால் அசைக்கவும் விழைகின்றனம் அல்லமோ? அவ்விழைவு மீதூரப் பெற்றக்கால் அவர்போல் அவைகளைச் செய்யக் கற்று நாம் மகிழ்தலும் உண்டன்றோ?

இங்ஙனம் நல்வினை செய்வாரைக் கண்டு நாமும் அவர்போற் செய்யவுஞ் செய்து மகிழவும் முனைந்து நிற்றல் போலவே, தீவினை செய்வாரைக் கண்டும், அவர்போற் செய்யவுஞ் செய்து மகிழவும் முனைந்து நிற்பாரும் உலகில் மிகப் பலராயிருக்கின்றனர். கடவுள் இல்லையென்றும், எல்லாம் இயற்கையே யென்றும், ஊன் உண்டல் கட்குடித்தல் வரைதுறையின்றி மருவல், ஏமாந்தவர் பொருளைக் கவர்தல், ஏமாறாதவரையும் ஏமாற்றுதல், அறிவில் ஏற்றத் தாழ்வின்மையின் ஒருவர் ஏனையொருவர்க்கு அடங்கா தொழுகுதல் முதலிய வினைகளையெல்லாம் அவரவர் தத்தம் வன்மை மென்மைகட் கேற்பச் செய்தல் குற்றமாகாதென்றும், ஆரவாரத்தோடு உரையாடுவார் திறத்தைக் கண்டு அவரை வியப்பாரும் செய்தொழுகுவாரும் வரவர மிகுதல் காண்கின்றனமல்லமோ?

இஃதென்னை? இயற்கையென ஒன்றே அனைத்து வல்லமையுடன் தோற்றுவித்ததோ ரினமாம் மாந்தரிலே இவ்விதப் பாகுபாடுகளை இயக்கவைத்த தென்னை? சிந்தித்தாய்வு காண்மின்! சிந்தனையாளரே! இத்தன்மையில் பாகுபாட்டை யளிக்கும் ஒரு

திறன் இயற்கைக்குண்டோவென வினவுகின்றேன். மேலும் இவ்வுலகில் நாம் காணுவதையொழிய வேறொன்றினையும் நாம் நம்போம், ஆவி உலகச் செய்திகளை அரங்கிற்குக் கொண்டுவர வேண்டா, அறையினுட் பூட்டிவைத்தல் நலமென்னும், நாத்திகப் பெரியாரின் உரைகளை நோக்கினால் அவ்விதமிருக்குமென்ற சிந்தனையெழுதலும் இயற்கையேயெனில், ஆவியுலகச் செய்திகளையும் அம்பலத்திற்குக் கொண்டுவரல் அவசியமென எழும் சிந்தனையும் இயற்கை தானே?

இவ்விரு எழுச்சிகளுக்கும் காரணமாவன அறிவெனவே யுரைத்தலே சாலப் பொருந்துமோவெனின் இயற்கையே யளித்த தோர் உருக்கொண்ட மானிடர்கள் கருத்திலெழும் பலதிறப் பட்ட சிந்தனைகளுக்காய காரணமென்னை? ஆராய்தல் நலம். மேலும் ஒரு தாய் பெற்ற மக்களிலே ஒருவன் தீர்க்க வுருப் பெற்றவனும், ஒருவன் முடவனாகவும், ஒருவன் ஒரு றுப்புக் கூடினவனும், பிறத்தற்குக் காரணமென்னை? நாத்திகவாதிகளுரைக்கவரின், மருவுதலின்கண் ஏற்பட்ட குறைவே காரணமெனக் காட்டலாமென்ற கருத்தும் நம்முள் எழுவதே. இன்னும் ஒன்றினைக் குறிக்கின்றேம். ஒரு தாய் பெற்ற மக்களிலே ஒருவன் கல்விமானாகவும், ஒருவன் கல்வியற்றவனாகவும் வாழ வழிவகுத்ததென்னை? நம் நாட்டில் பதிவிரதாமணிகள், தம் கணவருடனே கூடி மருவி அவர்கள் தம் மருவுதலிற் பெற்ற இரு புதல்வர்களே, யாம் மேற்குறிப்பிட்ட ஒரு தாயின்வழி உலகில் வந்த செல்வர்கள். காரணமென்னை? இருவரையுமே கல்விச் சாலைக்குக் கல்வி புகட்டுவான் அனுப்பியும், அவர் தம்முள் ஒருவர் கல்வியிற் சிறந்தவராகவும் மற்றவர் குறைந்தவராகவுமிருத்தலையும் காண்கின்றோ மல்லமோ? காரணமென்னை? இயற்கையே உருவாக்கிய ஒன்றிலே இந்தப் பாகுபாடு எய்தியதெங்ஙனே? இயற்கையின் படைப்புக்கு இவ்வித வேற்றுமை யளிக்க இயலுமோவெனச் சிந்தித்து மெய்ம்மை காணலை வாசகர்களாகிய நுங்களாய்வுக்கே விட்டுவிட்டனமென்பதையும் உரைத்தும். இயற்கையை இயக்கும் சத்தி கடவுளென ஒரு சிற்பிக்கேயல்லாது, இயற்கைக்கல்ல என்பதுடன் விடுகின்றனம்.

இந்திரப் புரட்சி

[வித்துவான், அ. பாலசுந்தர குருக்கள்]

திருக்குறள் சைனரால் இயற்றப்பட்டதென்று கருதியவர்கள் பலராவர். அவர்களுள் ஒருவரும் சைன சமயத்துள் கூறப்படும் தத்துவம், ஒழுக்கம் ஆகியவற்றுடன் திருக்குறளைப் பொருத்திக் காட்டவில்லை. திருக்குறள் ஏளாச்சாரியால் இயற்றப்பட்டதெனப் பிற்காலத்தில் யாராலோ திரிபுணர்ச்சியாலும், பற்றுள்ளத்தாலும் கூறப்பட்டதையே சான்ருகக்கொண்டு முன்னுக்குப்பின் முரணுக எழுத முற்படுகின்றனர். திருக்குறள் சைனரால் இயற்றப்பட்டதன்றென்பதைப் பல காரணங்களுடன் 'திருவள்ளுவர் சய்ணரா?' என்ற தலைப்பில் செல்வியில் முன்னர் எழுதியுள்ளேன். இந்திரன் பற்றிச் சைன சமயக் கொள்கையை அடிப்படையாகக்கொண்டு 'திருவள்ளுவர் வாழ்த்தும் ஆதிபகவன்'* என்ற நூலாசிரியர் கூறும் கருத்தை மட்டில் இங்குக் காண்போம்.

"ஐந்தவித்தா ஞற்றல் அகல்விசும்பு ளார்கோமான்
இந்திரனே சாலுங் கரி."

என்னும் இக்குறளுக்குப் பரிமேலழகர், "புலன்களில் செல்கின்ற அவா ஐந்தினையும் அடக்கினனது வலிக்கு அகன்ற வானத்துள்ளார் இறைவன் ஆகிய இந்திரனே அமையும் சான்று. தான் ஐந்து அவியாது சாபம் எய்தி நின்று, அவித்தானது ஆற்றல் உணர்த்தினன் ஆகலின், 'இந்திரனே சாலுங் கரி' என்று கூறினர்" என்று உரை கண்டுள்ளார். பரிமேலழகர் இக் குறளுக்கு இந்திரன் அகலிகையிடம் மோகங்கொண்டு அவளை வஞ்சகமாகக் கூடியதை உணர்ந்த கௌதமர், இந்திரனுக்கு உடல் எல்லாம் பெண்குறியாகுமாறு சபித்துப், பின்னர் அவன் வேண்டுகோளுக்கிரங்கி அப் பெண்குறிகள் யாவும் பிறருக்குக் கண்ணுகத் தோன்றும்படி சாபவிமோசனம் செய்த வரலாற்றையே மேற்கோளாகத் தந்து உரையெழுதியுள்ளார்.

இந்திரனுக்கு ஆயிரங்கண்ணன் (சகசிராட்சன்) என்ற ஒரு பெயருண்டு. இப்பெயரை விளக்குவதற்குப் பல கதைகள் புராணங்களில் கூறப்படுகின்றன. அவற்றுள் ஒரு கதையே பரிமேலழகர் குறிப்பிட்டதாகும்.

சைன சமயத்திலும் இந்திரனுக்கு ஆயிரங் கண்கள் உண்டென்றே கூறப்படுகின்றது. ஆனல், ஆயிரங் கண்ணை இந்திரன்

---

* 'திருவள்ளுவர் வாழ்த்தும் ஆதிபகவன்'—ஆசிரியர் T.S. ஸ்ரீபால்.

பெற்றதற்கு அறிவிற்குப் பொருந்தாத கதையொன்றையே சைன புராணமும் கூறுகின்றது. இக் கதைக்கும் மேற்குறித்த குறளுக்கும் சிறிதும் தொடர்பில்லை.

சைன சமயத்துள் 'இடபநாதர் முதல் மகாவீரர் வரையுள்ள இருபத்து நால்வரும் அருகந்தர் எனப்படுவர். இவர்கள் ஒவ்வொருவரும் உலகத்தில் தோன்றும்போது இந்திரன் தனது அறிவாலுணர்ந்து அவர்களை வானுலகிற் கெடுத்துச்சென்று வழிபடுவான். இவ்வழிபாட்டில் பல இந்திரர்கள் கலந்துகொள்ளுவார்கள்' என்று கூறப்படுகின்றது. சைன சமயத்தில் கூறப்படும் இவ்வரகந்தர்கள் ஒன்னார்த் தெறலும் உவந்தாரை யாக்கலும் ஆகிய தவவலி இல்லாதவர்கள் ஆவர்.

'இறைவனே! நினது உருவழகினைத் தனது இருகண்களால் நோக்கியும் அமையாத இந்திரன் ஆயிரங் கண்களால் கண்டு மகிழ்கின்றான்'—(ஆதிபுராணம்). ஆதிபுராணத்துள் காணப்படும் இந்த மேற்கோளால் ஐந்தவித்த அரகந்தரின் ஆற்றல் புலப்படவில்லை இந்திரன் அரகந்தரை வணங்குவதால் அவர்களின் பெருமையே புலனாகின்றது. இந்திரன் தானே ஆயிரங் கண்களை உண்டாக்கிக்கொண்டு நோக்கினான் என்று கூறுவதில் உள்ள தத்துவ நுட்பத்தை நாம் நன்கு நோக்குதல் வேண்டும். எடுத்துக்காட்டிய சுலோகமும் இந்திரன் தானே தனக்கு ஆயிரங் கண்களை உண்டாக்கிக்கொண்டான் என்றும் குறிக்கவில்லை. அரகந்தர்கள் இந்திரர்களால் வணங்கப்படும் பெருமைவாய்ந்தவர்கள் என்பதையே சைன சமயநூல்கள் கூறும்.

"இந்திரர் தொழப்படும் இறைவனெம் மிறைவன்."
—மணிமேகலை.

"மந்திர வாய்மொழி மறுவில் மாதவர்
இந்திரர் தொழுமடி யினிதி னெய்தினான்."
—சிந்தாமணி, கஉ௱கூ.

எனவரும் செய்யுள்களால் சைன சமயத்துள் இந்திரர் பலர் என்று கூறப்படுவதையும், அரகந்தர்கள் இந்திரரால் வணங்கப்படும் பெருமை வாய்ந்தவர்கள் என்பதையும் அறியலாம்.

"ஐந்தவித்தா னாற்றல் அகல்விசும்பு ளார்கோமான்
இந்திரனே சாலுங் கரி."

என்னுங் குறளுக்குப் பரிமேலழகர் செய்த உரையால் ஐந்தவித்துயர்ந்தோரின் தூய தவநெறியும், அவர்களை வழிபடும் இந்திரனது எழில்நிலையும் மாசடைகின்றன. இக்குறள் அரகந்தரை இந்திரன் வழிபடுவதையே குறிக்கின்றது என்றெழுதியுள்ளார்.*

* 'திருவள்ளுவர் வாழ்த்தும் ஆதிபகவன்' பக்கம், 16.

சைன சமயத்துள் அரகந்தர்களும், இந்திரர்களும் பலராவர். இவர் குறிப்பிடுவதுபோல் இக்குறள் அரகந்தரை இந்திரர் வழி படுவதைக் குறிக்கவேண்டுமானல்,

"ஐந்தவித்தா ராற்றல் அகல்விசும் புளார்கோமா
னிந்திரரே சால்வர் கரி."

என்றாற்போல் பன்மையாக இருத்தல் வேண்டும். வள்ளுவர் 'ஐந்தவித்தான்' என்றும், 'இந்திரன்' என்றும் ஒருமையாகவே குறித்துள்ளார். மேலும் 'ஆற்றல்' என்ற சொல்லை வள்ளுவர் எப்பொருளில் எடுத்தாளுகின்றார் என்று காணவேண்டும். 'ஆற்றுவா ராற்றல் பசியாற்றல்' என்பதுபோல் செய்தல், வலிமை ஆகிய பொருளிலேயே பலவிடத்தும எடுத்தாளுகின்றார். ஐந்தவித்தல் என்று வள்ளுவர் இக்குறளில் குறிப்பிட்டது தவத் துறுப்பாகிய புலனடக்கமேயாகும். இப் புலனடக்கத்தால் உண்டாகும் ஆற்றல் அனைத்தும் இயற்றவல்லதாகும்.

"நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்."

"குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயுங் காத்தல் அரிது."

"ஒன்னார்த் தெறலும் உவந்தாரை யாக்கலும்
எண்ணின் தவத்தான் வரும்."

எனவரும் குறள்களால் தவவலியுடையோர் தீயோரைக் கடிந்து ஒறுத்தும், நல்லோரை ஆக்கியும் நலம்பல புரிவர் என்பதை வள்ளுவர் குறிப்பிடுகின்றார் என்பதை அறியலாம். திருக்குறளில் புராணக் கதைகள் பல அமைந்துள்ளன வென்பதையும் மறுக்க முடியாது. இவற்றையெல்லாம் மறந்து பரிமேலழகரைக் குறை கூற முற்பட்டது பொருத்தமாகத் தோன்றவில்லை. 'திருவள் ளுவர் வாழ்த்தும் ஆதிபகவன்' என்ற நூலின் ஆசிரியர் கூறும் உரையால் அரகந்தரின் பெருமையும் இந்திரனது ஆற்றலும் ஆகியவையே வெளியாகும். மேலும் அரகந்தரைப் பல இந்திர ரும் வழிபாடு செய்யும்போது ஒரு இந்திரன் மட்டும் அவருடைய அழகைக்காண இருகண் போதாமையால் ஆயிரங் கண்களை உண்டாக்கிக்கொண்டு காண விழைந்ததேன்? மற்றவர்கள் அவ்வாறு செய்யாததேன்? என்பன போன்ற ஐயங்கள் உண்டா கின்றன.

தவறிழைப்போன் இந்திரனானல் என்ன? சந்திரனானல் என்ன? அத்தவற்றிற்குரிய தண்டனையை அடைந்தே தீர்வர் என்பதையே புராணங்கள் உணர்த்துகின்றன. இவற்றைக்

கொண்டு இவர்களைப் புராணங்கள் இழிவுபடுத்துகின்றன எனக் கூறுதல் அறிவுடைமையாகாது. அவர்களைப் புராணங்கள் போற்றும் இடங்களினும் நாட்டத்தைச் செலுத்த வேண்டும். ஒரு புராணக் கதை இழிவுபடுத்துவதாகக் கூறிக்கொண்டே கற்பனையே மிகுந்த மற்றொரு புராணத்தைக் கொணர்ந்து குறளுக்கு வலிந்து பொருள்காண முற்படுதல் எவ்வாறு பொருந்தும்? பரிமேலழகரால் மட்டும் இந்திரன் எழில்நிலை மாசடைந்தது எனக் கூறமுடியுமா?

இளங்கோவடிகள் தவத்தின் ஆற்றல் எவ்வாறு புலப்படும் என்பதைக் கவுந்தியடிகள் வாயிலாக விளக்குகின்றார். கோவலன், கண்ணகியுடன் மதுரைக்குச் செல்லும்போது கவுந்தியடிகள் அவர்களுக் குறுதுணையாகச் செல்கின்றார். மூவரும் ஒரு பொழிலில் தங்கி இருக்கையில் கல்வியறிவில்லா ஒருவன் தன் காதலியுடன் அங்கு வருகின்றான். வந்தவன் அழகிற் சிறந்த கோவலன் கண்ணகி ஆகியோரைக் கண்டு கவுந்தியடிகளை நோக்கி, இவர்கள் யார்? என வினவுகின்றான். அதற்கு அடிகள் 'இவர்கள் என் மக்கள்' என்று விடையிறுக்கின்றார். அடிகளின் விடை அவனுக்கு மேலும் ஐயத்தை யுண்டாக்கவே, 'ஒரு தாய் வயிற்றில் பிறந்தோர் கணவனும் மனைவியும் ஆவார்களோ!' எனக் கூறித் தன் காதலியுடன் சேர்ந்து நகைக்கின்றான். கவுந்தியடிகள் 'இவ்வாறு நகைக்கின்ற நீவிர் முள்ளுடைய காட்டில் முதுநரிகளாகித் துன்புறுக' எனச் சபிக்கின்றார். "வம்பப் பரத்தை....... தவந்தரு சாபம்" (சிலம்பு, நாடுகாண்.) இளங்கோவடிகள் இங்கு கவுந்தியின் தவவொழுக்கத்துக்கு மாசுண்டாக்கினர் என்று கூற முடியுமா? இத்தகைய ஆற்றலையே 'ஐந்தவித்தான் ஆற்றல்' என்று திருவள்ளுவர் குறிப்பிடுகின்றார். இளங்கோவும் தவந்தரு சாபம் என்றே குறிப்பிடுவது அறிந்தின்புறத்தக்கதாகும்.

பரிமேலழகராயினும் பிறராயினும் யாராயினும் தவறுண்டேல் பொருத்தமான உரை கூறி மறுப்பதே அறிவுடைமையாகும். தங்கள் சமயத்துக்கு மாறான ஒரு நூலுக்கு உரையெழுத முற்பட்டதோடல்லாமல் வைதிக சமயக்கூற்றால் ஐந்தவித்துயர்ந்தோரின் தூய தவநெறி மாசடைகின்றது என்றும், இந்திரனது எழில்நிலை மாசடைகின்றதென்றும் எழுத முற்பட்டது அறிவுடைமையாகத் தோன்றவில்லை.

வைதிக சமயத்தினரைவிட இந்திரன் எந்த வகையிலும் சைன சமயத்துக்கு நெருங்கிய தொடர்புடையவனுகான். வைதிக சமயத்தினரே இந்திரனைப் பழித்தார்கள் என்றும் கொள்ள முடியாது. வைதிக சமயத்துக்கு மாறானவர்களும் இந்திரன் மீது பல குற்றங்களைச் சுமத்தியுள்ளனர். மணிமேகலை பௌத்த

சமயத் தத்துவங்களையும் ஒழுக்கங்களையும் உணர்த்தவே சாத்தனரால் இயற்றப்பட்ட தமிழ் மூலநூலாகும். மணிமேகலை பௌத்த நூலென்று ஐயத்துக்கு இடமின்றி யாரும் கூறலாம். சிலப்பதிகாரம் சமணரால் இயற்றப்பட்டதன்று. மணிமேகலையில் சாத்தனர் இந்திரனைப்பற்றி விரிவாகக் கூறியுள்ளார்.

இந்திரன் என்பது தேவர்கள் தலைவனுக்குரிய பட்டப் பெயராகும். இப்பதவி நல்வினை முதிர்வால் உண்டாவதாகும். நல்வினைப்பயன் நீங்கின் இப்பதவியும் நீங்கிவிடும். இந்திரப் பதவியைப் பெற்றோர் தம் பதவி நீக்கத்தை விரும்புவார்களா? இக்காலத்தில் சிறிய பதவிகளையே விடாமல் அவற்றில் அட்டை போல் ஒட்டிக்கொள்ளுகின்றார்களே! இந்திர பதவிபற்றிக் கூறவும் வேண்டுமா? பதவியில் உள்ள இந்திரன் பிறரொருவரும் நல்வினை செய்து அப்பதவிக்கு வராமல் தடுப்பான். இதனை விசுவாமித்திரன் தவமியற்றியபோது இந்திரன் மேனகையை அனுப்பி அவனது தவத்தைக் கலைத்த வரலாற்றாலும் உணரலாம்.

ஆற்றா மக்கள் அரும்பசி களைந்த ஆபுத்திரனது நல்வினைப் பெருக்கம் இந்திரனது வெண்கம்பளியை நடுங்குமாறு செய்கின் றது. இக் கருவியின் வாயிலாக உலகில் ஒருவன் இந்திர பதவிக்கு ரத்தக்க நல்வினை புரிகின்றான் என்பதையுணர்ந்த இந்திரன் டனே புறப்பட்டு ஆபுத்திரன் முன்தோன்றி அவனை மயக்கி வறுவழியில் திருப்ப முயல்கின்றான் என்பதை,

“ஈண்டுநீர் ஞாலத் திவன்செயல் இந்திரன்
பாண்டு கம்பளம் துளக்கிய தாகலின்
தளர்ந்த நடையின் தண்டுகால் ஊன்றி
வளைந்த யாக்கையோர் மறையோ னாகி
மாயிரு ஞாலத்து மன்னுயிர் ஓம்பும்
ஆருயிர் முதல்வன் தன்முன் தோன்றி
இந்திரன் வந்தேன் யாது நின்கருத்து
உன்பெருந் தானத்து உறுபயன் கொள்கென.”

—மணிமேகலை, பாத்-மர-காதை.

எனவரும் பகுதியை நோக்குக. இதையெல்லாம் மறைத்து ஒரு சாராரை மட்டும் மறுக்கத் துணிந்ததேன்? சாத்தனரும் வைதிக நோக்குடையவரா? இவற்றையெல்லாம் நினைத்துப் பார்க்கின் ஏதோ இந்திரப் புரட்சி செய்வதாகத் தோன்றுமேயன்றி அறிவுக்கு ஆக்கந் தரும் செய்தி ஒன்றும் இவ்வாசிரியர் கூற வில்லையென்பது புலனாகும்.

அறக்கொடை வடிவினர்

அருணந்தித் தம்பிரானடிகள்

[கழகப் புலவர், திரு. ப. இராமநாத பிள்ளை]

"செல்வன் கழலேத்தும் செல்வம்" சிறப்புறப் பெற்ற சிவத் திருவாளர் அருணந்தித் தம்பிரானடிகள் ஆவர். செந்தமிழும் சிவ னெறியும் முந்துறப்பேணும் மூத்த திருநகர் நெல்லை மாவட்ட மாகும். ஈண்டுத் "தென்றல் வந்துலவுவது" யாண்டுமில்லாத் தனிச் சிறப்பாகும். இத் தென்றல் உடலையும் உயிரையும் குளிர்ப் பிக்கும் சிரமிழ்தமாகும். அதன்கண் பொருநை என்னும் வாழ் யாறு என்றும் பொருவின்றி நின்று வளஞ் செய்கின்றது. அம் மட்டோ? தெய்வத் தீந்தமிழ் ஆருயிர்களின் உணர்வையும் உயிரையும் சிவமணம் செழிக்கச் செய்கின்றது. சிவபெருமான் திருக்குற்றாலத்தை யடுத்ததும் "தமிழ் திருச்செவி மாந்திட" என்பதன்றோ? திருவிளையாடல்.

அத்தகைய பெருமாவட்டத்தில் அரியநாயகிபுரம் என்னும் திருவூரில் மண்டு புகழ்சேர் தொண்டைமண்டல வேளாண் விழுக்குலத்தில் இருமுதுகுரவரும் இயற்றிய அருந்தவப் பேற்றால் செந்திலாண்டவன் திருவருளால் நம் அடிகளார் இற்றைக்கு அறுபது ஆண்டுகளுக்கு முன் ஆவணி மூல நன்னாளில் தோன்றி யருளினர். இவர்கள் பிறத்தற்கு வேண்டும் தவம் செய்துள்ள அத் திருவூர் 'குமரகுருபர அடிகளார்க்கு மன்னர் திருமலைநாயக்கரால் அளிக்கப்பெற்ற முற்றூட்டாகும்.' முற்றூட்டு-சருவமானியம். அதன்கண் தோன்றக்கூடிய முற்றவப் பேறுடைய நம் அடிகள், அக் குமரகுருபர முனிவரனாரின் திருமட முதல்வராயது சாலப் பொருத்தமல்லவா? நம்மடிகளார்க்கு இயல்பாகவே செந்தமிழி னிடத்தும், சிவனெறியினிடத்தும், சிவமுருகனிடத்தும் மட்டி லாக் காதல் வளர்ந்தோங்கியது. இளமைக் கல்வியினைத் திருநெல் வேலி, இந்துக் கல்லூரியின்கண் திறம்படக் கற்றனர். கற்குங் காலத்தும் காதலுள்ளம் கடவுளின் பாலே மிக்கிருந்தது. பின் சில பல அலுவல்களிற் சேர்ந்து பணி செய்தனர். உள்ளம் உண்மைத் துறவை நாடிற்று; உலகியற்பற்று அற்றது; உடை யான் பற்று உற்றது. நற்றுறவினை எய்தி நலம் பெற வுன்னிய வடிகள் திருத்தருமபுரத் திருமடத்தை யண்மினர்.

அந்நன்னாளில் அத் திருமடத்து முதல்வராய் வீற்றிருந்து அருளாட்சி நிகழ்த்தியவர் சிவத்திரு சுப்பிரமணிய தேசிகஞான சம்பந்த பரமாசாரிய சாமிகளாவர். இவர்கள் அம் மடத்தின்

இருபத்து மூன்றுவது முதல்வராவர். இவர்பால் சைவப் பெருந் துறவும் சிவஞான தீக்கையும் பெற்றுச் சிறந்தனர். இங்குச் சைவசித்தாந்தப் பொருள் நூல்கள், திருமுறைகள், மற்றும் பல சமய நூல்கள் முதலியவற்றை நன்கு கற்றுத் தெளிந்தனர். மேலும் 'ஞானவரணம்' 'முத்தி நிச்சயம்' முதலிய பண்டார சாத்திரங்களைப் பழைய சுவடிகளிலிருந்து பெயர்த்தெழுதும் பேறும் பெற்றனர் தருமை ஆளுகையின் உரிமையான பல திருக் கோயில்களை மேற்பார்க்கும் திருப்பணியையும் திறம்படப் புரிந் தனர். சமய மாநாடுகள் பலவற்றிற்குத் தலைமை பூண்டு அணி பெற நடத்தினர். தருமையில் நிகழ்ந்த 'மெய்கண்ட சாத்திர மாநாட்டி'லும் இருபத்து நான்காவது குருமகா சந்நிதானம் சிவத்திரு சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சாமிகளின் பத்தாவதாண்டு ஆட்சி 'விழாவிலும் பெரும் பங்கு பெற்று வரவேற்பு, வாழ்த்து, நன்றி முதலிய நன்மொழிகளை நயம் பெற நவின்று சிறப்பித்தனர். அடிகளாரின் தேனினும் இனிய தீங்குரல் திருமுறைச் செழும் பாலமுதுடன் கலந்து கேட்பார் ஊனினையுருக்கி உள்ளொளி பெருக்கி உலப்பிலா இன்பவுணர் வினை எழுப்பி உவகையூட்டும் இயல்பிற்று. அத்தகைய இன் குரலில் புகழ்நூல்களாம் திருமுறைச் செழும் பாடல்களை யோதிப் பலர்க்கும் பயன் பெரிதளித்தனர்.

அந்நாளில் திருப்பனந்தாளில் எழுந்தருளியிருந்தவர்கள் காசிவாசி சிவத்திரு சாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் ஆவார் கள். இவர்கள் பத்தொன்பதாம் முதல்வராவர். இவர்கள் அடிக ளாரின் அன்பருள், அறிவு ஆற்றல் அரும்பணி முதலிய திறமை களைக் கண்டுங் கேட்டும் உளங்கொண்டுவந்து இவர்களையே தம் பிற்றோன்றலராய் அமர்த்த ஆர்வங்கொண்டனர். கொண்டு 1944 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 26 ஆம் நாள் அடிகளாரைத் திருமடத்தின் முதல்வராக்கினர். அம்முறையில் நம்மடிகளார் இப்பொழுது இருபதாவது முதல்வராக வீற்றிருந்து அருளாட்சி புரிந்து வருகின்றார்கள். இவர்களின் ஆட்சித்திறனும், அருளுள மும், பொருள்வளமும், சிவன் திருவாணைத் துணையும் நாளும் வளர்ந்து பன்னூற்றுக் கணக்கான பயனுள அறங்களாகப் பல்கி வருகின்றன. அவை இதுகாறும் ஏறத்தாழ வெண் பொன் ஐம்பத்திரண்டரை நூறாயிரத்திற்குரிய இருநூற்று எண்பத் தொன்றின் மேலாம் பேரறக் கட்டளைகளாகும். விரிவஞ்சிச் சுருக்கமாகக் குறிப்பிக்கின்றோம்.

"சொல்லாற் சாற்றிச் சோறிடும்" பேரறம், பன்னிரு முறை களையும் நல்ல முறையாக அச்சிடுவித்து மலிவாக வழங்கி வருதல், சிறந்த சிவப்பதிகளில் தேவாரம் ஓதும் திருப்பணி நிகழ்வித்தல்,

எண்ணிறை பண்ணுடன் ஓதும் ஓதுவார் பலரைப் பல திருக்கோவில்களில் அமைத்துத் தொண்டாற்றுவித்தல், கல்வி நிலையங்களில் பயிலும் இளம் மாணவர்கள் திருமுறைகளை நெட்டுருப்பண்ணிப் பயன்பெறப் பரிசுத்திட்டங்கள் அமைத்தல், சிவப்பதிகளில் வனப்புறு வெண்கல்லில் தேவாரத் திருப்பதிகங்களை எழுதுவித்துப் பதித்தல் முதலிய சிவத்தொண்டுகளாகும்.

மாறு மெய்ப்பொருளுண்மை விளங்கத் தேற்றும் சைவ சித்தாந்த நுண்ணூல்கள் நாடெங்கும் பரவி நற்றமிழும் நான்மை நன்னெறியும் மேன்மையுறப் பல பரிசுத் திட்டங்கள் அமைத்துள்ளார்கள். இந் நூல்கள் இவர்களியற்றும் இணையிலாப் பேரறப் பெருங்கட்டளையால் இந்நாளில் வட இந்தியப் பல்கலைக் கழகங்களிலும் பயிற்றப் பெற்று வருகின்றன. பிறமொழியாளர்க்குத் துணையாகச் சித்தாந்த நூல்கள் இந்தி ஆங்கிலம் முதலிய மொழிகளில் வெளியிடப்பெற்று வருகின்றன.

கல்லூரிகள், உயர்நிலைப் பள்ளிகள், தொடக்கப் பள்ளிகள், முதலிய கல்வி நிலையங்களுக்குப் பெரிய அளவில் நன்கொடை வழங்கியுள்ளார்கள். தம்மாட்சியில் செந்தமிழ்க் கல்லூரி, உயர்நிலைப் பள்ளிகள், தொடக்கப் பள்ளிகள் பற்பல நடத்தி வருகின்றனர்.

குமரகுருபர முனிவரனார் திருவருளால் திருத்தோற்றம் எய்தி, சீவைகுண்டத்தின்கண் பார்க்குமிடமெங்கும் அவர்தம் திருப்பெயரும் நாட்டமும் மாந்தருள்ளத்து உருப்பெற்றெழச் செய்துள்ள அறங்கள் அளப்பில. அவற்றுள் சில வருமாறு: "குமரகுருபரன் என்ற மாதவிதழ், அத்திருப் பெயராலேயே திகழும் அச்சகம், உயர்நிலைப் பள்ளிகள், நூலகங்கள், மன்றங்கள்" போன்ற பலவாம்.

நன்கொடையாக ஏழை மக்கள் பலர் மருத்துவம் பெறுகிறார்கள். நீராடுவதற்கு வேண்டிய பல தீர்த்தக் கட்டங்கள் அமைத்து வழங்கப்பட்டுள்ளன. புலவர்கட்குப் பொருவரு நன்கொடைகளும், பட்டங்களும், பரிசில்களும் ஆற்ற வழங்கி வருகின்றனர். சிறந்த ஆனினங்களை வளர்ப்பதற்கென்று பரிசுத் திட்டங்கள் அமைத்துள்ளார்கள்.

பொன்னம்பலத்தும், வெள்ளியம்பலத்தும், தேவாரத் திருப்பதிகங்களின் கல்வெட்டுகள், நாள்வழி ஓதுதற்குவேண்டும் துணைகள், சொற்பெருக்கு நிகழ்ச்சிகள், சிவவொளிசிறக்கும் காட்சிகள் அமைத்துள்ளார்கள். ஏறத்தாழ இருபத்தைந்துக்கு மேற்பட்ட திருவூர்களில் 'சிவ சிவ' ஒளிவளர் விளக்குகள் அணி செய்கின்றன. தில்லை, காஞ்சி, காசி, மதுரை, இராமேசுரம், திருக்

குற்றாலம், சென்னையைச் சார்ந்த கபாலீச்சுரம், திருவள்ளுவர் திருக்கோவில், திருவேட்டீசுரன் பேட்டை முதலிய இடங்களில் நன்கொடையாக ஒலிபெருக்கிகளை அமைத்துள்ளார்கள். திருமுறை ஓதும் திருவிழாக்கள் பல திருவூர்களில் நிகழச் செய்துள்ளார்கள். சிறப்பாகத் திருவாரூர், தில்லை, மதுரை, திருக்குற்றாலம், திருவிடைமருதூர் முதலிய திருவூர்களில் குறிப்பிட்ட சில முதன்மை நாட்களிலும், திருவிழாக்காலங்களிலும் திருமுறைவாணர்கள் பண்ணுடன் ஓதும் தேவாரச் சிவப்பணி புரிய வேண்டுவன அமைத்துள்ளார்கள். செந்தமிழ்ப்பொதுமறையாம் ஆயிரத்து முந்நூற்று முப்பதருங் குறளும் மதுரைத் திருக்கோவிலின்கண் கல்லெழுத்தில் பதிப்பித்துள்ளார்கள். இவ்வகையாகச் செய்தருளியுள்ளவற்றைத் தொகுத்துக் காணுமிடத்து வருமாறு காண்க.

க.	சைவசித்தாந்தம், திருவாசகம், பெரியபுராணம், கந்தபுராணம் முதலிய திருவருணூற் சொற்பொழிவுகளுக்கு	55000
உ.	சைவசித்தாந்தப் பயிற்சி பரப்புதற் பணிகட்கு	76000
௩.	திருமுறை வெளியீடுகளுக்கு	112975
ச.	மாணவர்கட்கு வழங்கும் உதவிப்படி	725000
ரு.	உயர்நிலைப் பள்ளிகள், கல்லூரிகள், மாணவருறையுள் முதலியவற்றிற்கு	455700
சு.	பார்ப்பனர்க்கும் ஏழைகட்கும் உணவளிக்க	2296800
எ.	மாணவர்கட்குப் பரிசு வழங்கல் முதலியன	226500
அ.	மருத்துவமனைகள், நலவிடுதிகள், குடிநீர் வாய்ப்புக்கள் முதலியன	234445
கூ.	பல திருக்கோவில்களில் பண்ணொடு பாடும் ஓதுவார்களை அமைத்தல்	524500
க0.	தேவாரத் திருப்பாடல்களைக் கல்லெழுத்திற் பதித்தல்	57000
கக.	வழிபாட்டு மண்டபங்கள், நூல்நிலையங்கள், அப்பர் அகத்தியர் திருமடங்கள் முதலியன	142725
கஉ.	நெய்விளக்கிடுதல், பழுது பார்த்தல், பசுக்காத்தல் முதலியன	332100
		52,38,745

"தண்ணார் அருள்நந்தித் தம்பிரான் சால்கொடையால்
கண்ணார் சிவநெறிநன் னித்தமிழும்—பண்ணார
ஓங்குவபோல் ஆறுபத் தொன்றின்மேற் பல்லூழி
ஓங்கிமிக வாழ்க உகந்து."

தீப நாடகங்கள்

[திரு. பா. பச்சையப்பன்]

(செல்வி சிலம்பு ௩௪, பரல் ௧, ௩௭-ஆம் பக்கத்தொடர்ச்சி)

ஓதிபன்: என்னுடைய மக்காள், உங்களுக்காக வருந்துகிறேன். என்னை நம்புங்கள். உங்கள் துன்பங்களை உணர்ந்து துன்பப் படுகிறேன். உங்கள் துன்பங்களை யெல்லாம் சேர்த்து ஒருங்கேயிருந்தாலென வருந்துகிறேன். நான் தூங்க வில்லை, துக்கப்படுகிறேன். எவ்வாறு இத் துன்பத்தினைப் போக்கலாம் என்று எண்ணி வருந்துகிறேன், சோம்பலாகக் காலம் கழிக்கவில்லை. என் உறவினன் கிரியனை அப்பால் லோவின் புதிய இல்லத்திற்கு அனுப்பியுள்ளேன். இன்று தான் அவன் வரவேண்டிய நாள். இன்னும் அவன் வந்து சேரவில்லையே என்று மனக்கலக்கமாக இருக்கிறேன். அவன் வந்து தெய்வம் எதைச் செய்யச் சொன்னாலும், அதைச் செய்து முடிப்பேன்.

பூசாரி: நல்லது சொன்னீர். (தொலைவிலிருந்து யாரோ வருவதைக் காண்கிறான்) அதோ பாருங்கள் கிரியன் வருவதுபோலிருக் கிறது. ஆம், அவரேதான், இதோ வருகிறார்.

ஓதிபன்: (பார்த்த வண்ணம்) சிரித்த முகத்துடன் காணப்படு கிறான் கிரியன். அவன் கொண்டுவருவது நல்ல செய்தியாக இருக்கட்டும்.

பூசாரி: அவர் கொண்டுவருவது நல்ல செய்தியாகத்தான் இருக்கவேண்டும். முகமே காட்டுகிறதே.

ஓதிபன்: விரைவில் அறிந்துகொள்வோம். நாம் சொல்வது அவனுக்கும் தொலைவில் வந்துவிட்டான்....வருக சோதர, தெய்வ வாக்கிலிருந்த செய்தி என்னவோ.

[கிரியன் வருகிறான்]

கிரியன்: நல்ல செய்திதான். துன்ப நிகழ்ச்சியிலும் நல்லது கிடைக்கும்.

ஓதிபன்: தெய்வம் என்ன சொல்லிற்று? அச்சத்திற்கும் நம்பிக்கைக்கும் இடையே நிறுத்தி வைக்காதே. சொல் சீக்கிரம்.

கிரியன்: இவரனைவர் முன்னிலையிலும் சொல்லவேண்டுமாயின் சொல்கிறேன். உள்ளே சென்று பேசுவது நன்று.

ஒதிபன்: இவர்கள் முன்னேயே சொல். அவர்கள் துன்பம் என்னைச் சார்ந்தது. என் உயிரினும் மேலாக நினைக்கச் செய்யத்தக்கது.

கிரியன்: நம் நாட்டில் பிறந்து வளர்ந்துள்ள தூய்மையற்ற ஒன்று நாட்டைப் பாழ்படுத்துகிறதாம். அதனை ஒட்ட வேண்டும். நம்மை அழிப்பதற்கென்று உள்ள அதனை வைத்திருக்கக் கூடாதாம்.

ஒதிபன்: தூய்மையற்ற ஒன்று என்பது எது? தூய்மைப் படுத்துதற்கு என்ன செய்யவேண்டும்?

கிரியன்: தூய்மையற்ற அவனை வெளிக்கடத்த வேண்டும். அல்லாக்கால் இரத்தத்திற்கு இரத்தம் கொடுக்கவேண்டும்.

ஒதிபன்: எந்த இரத்தம்? யார் இறந்தது? பழிக்குப்பழி யாரை வாங்கவேண்டும்?

கிரியன்: தாங்கள் வருமுன் இருந்த அரசர் இலேயர்.

ஒதிபன்: யான் அறிவேன். ஆயின் அவரைப் பார்த்தல்லை.

கிரியன்: அவர் இனந்தெரியா ஒருவனால் கொல்லப்பெற்றார். எனவே கொன்றவனைக் கண்டுபிடித்துப் பழிவாங்க வேண்டும் என்பது தெய்வ கட்டளையின் கருத்தாகும்.

ஒதிபன்: அவன் எங்கிருப்பான்? பல்லாண்டுகளுக்கு முன் நேர்ந்த அக் கொடுமையினைச் செய்தவனை எப்படிக் காண்பது?

கிரியன்: அதனைத் தெரிந்து கொள்ளவேண்டுமாயின் தேடிக் கண்டுபிடிப்பாய் என்பதே தெய்வம் சொன்னது.

ஒதிபன்: வீட்டிலா, திறந்த வெளியிலா, வெளிநாட்டிலா இலேயர் இக் கொடுவினைக் காளாகியது.

கிரியன்: யாத்திரை சென்று வருவதாகச் சொல்லிச் சென்றார். அந்த நாளைக்குப் பின் நாங்கள் அவரைப் பார்க்கவில்லை.

ஒதிபன்: அவருடன் சென்றோர் யாருமில்லையா? என்ன நடந்தது என்று தெரிந்துகொள்ள இயலவில்லையா? தெரிந் தால் கொலைக்காரனைக் கண்டுபிடிக்க இயலுமே!

கிரியன் : எல்லோரும் இறந்து விட்டனர். ஒருவன்தான் மீண்டான். அவன் அஞ்சி ஓடிவிட்டான். அவனால் ஒன்றுதான் சொல்ல முடிந்தது.

ஓதிபன் : அது என்னவாம்? அவ்வொன்றே மற்றவற்றைக் காட்ட உதவுமன்றோ?

கிரியன் : அவன் சொன்ன கதை, பல திருடர்கள் வழிமறித்துக் கொன்றுவிட்டார்கள் என்பது.

ஓதிபன் : வழிப்பறிக்காரர்கள் அவ்வாறு கொடூரமாக நடந்து கொண்டிருக்கமாட்டார்கள். அவ்வாறு செய்வதற்குப் பொருள் கொடுத்து யாரேனும் ஏவியிருக்கவேண்டும்.

கிரியன் : அப்படியுந்தான் நடைபெற்றது. ஆனால் பின் வந்த இன்னல்களில் கொலைகாரர்களைப் பழிதீர்க்க ஒருவனும் முன் வரவில்லை.

ஓதிபன் : என்ன இன்னல்களாம்? ஒரு அரசன் மரணத்தைப் பற்றி ஆராய்தற்குத் தடையாக வந்த பெருந்தடையொன்றுங் காணோமே!

கிரியன் : விடுவிக்க இயலாத மாயத்தை ஆய்தலினும் மிக அவசரமானவற்றைக் கருதிச் செய்யுமாறு ஸ்பிங்க்ஸ் தன் சொற்களால் வற்புறுத்தப்பட்டோம்.

ஓதிபன் : அப்படியாயின், நான் அக் கொலையை ஆய முற்படுவேனாக. முற்பட்டு அனைத்தையும் வெளிச்சமாக்குவேனாக. இறந்தாருக்குச் செய்யும் கடமையைக் காட்டிய உனக்கு நன்றி. இலேயனைக் கொன்ற அக்கையே நாளை என்னையும் கொல்லும்; எனவே அக் கொலையாளியைக் கண்டுபிடிப்பது என் கடமையாகும். மக்களே எழுந்து செல்லுங்கள். தெய்வத்தின் அருளால் அனைத்தையும் அறிந்து ஆவன செய்வோம் என்பதை மற்றவர்கட்கும் அறிவியுங்கள்.

[ஓதிபன் அரண்மனைக்குள் செல்கிறான். செய்தி சொல்லி வெளியே பொதுமக்களுக்குச் சொல்ல வேண்டுவனவற்றைச் சொல்லப் போகின்றான். அங்கிருந்த மக்களைக் கலைந்து செல்லுமாறு பூசாரி சொல்லுகிறான்.]

பூசாரி : எழுந்திருங்கள் குழந்தைகளே! அரசன் நாம் வந்து கேட்டதைச் செய்வதாகச் சொல்லியுள்ளான். செய்தி சொல்லியனுப்பிய சந்திரத் தெய்வம் நம்மை இத் துன்பத்தினின்றும் காப்பாற்றும்!

[அனைவரும் பிரிந்து செல்கின்றனர்.]

(தீப நாட்டு முதுமக்கள் குழு வருகிறது)

குழு

நிலவொளியின் திருவிளங்கும் நெடியபுகழ்த் தீபாகரத்
துலவுபுகழ் வான்வெளியின் றொருகுரலும் வருவதுகேள்
கலகமொழி மனமயங்கும் கவினுடைய தெய்வதமே
நலமெனக்கு வருகவென நனிவணங்கி வாழ்த்துதுமே.

அஞ்சுமெமக் கருளுகவே அதினனெனும் தெய்வதமே
செஞ்சொலிளஞ் செல்வியினை தருள்தங்கை அத்தமியாள்
விஞ்சுபுகழ்த் தெய்வதங்கள் மீட்கவெமைக் கொடுநோயும்
பஞ்சுபடு தீயுமெனப் பலப்பலவாந் தீங்கினின்றே.

சொல்லொணுத் துன்பம் சூழ்ந்திடு மீண்டே
இல்லமும் வெளியும் எங்கணும் சாதலே
மக்களை இழந்த தாயும் பிறரும்
திக்கெல்லாம் கிடந்து திருவினை வணங்கி
மரணப் பகைவனை மாய்க்கவென் றேங்கி
வாழ்த்துவம் பெரிதே வாழ்த்துவம் பெரிதே.

[அரண்மனையினின் றும் ஒதிபன் வெளிவருகிறுன்.]

ஒதிபன்: நீங்களெல்லோரும் கடவுளை வணங்கினீர்கள். நீங்கள் என் ஆணைக்கடங்கி உங்களுடைய துன்பினைப் போக்க என்னை நம்பினுல் நல்லது கிடைக்கும். தீப நாட்டு மக்களே, உங்களிடம் யான் தெரிவிப்பதாவது, இலபுடகன் மகன் இலேயனைக் கொன்றது யாரென்று உங்களில் யாருக்கேனும் தெரியுமாயின் என்னிடம் சொல்லுக.

[அனைவரும் அடங்கிநிற்கின்றனர்.]

அன்றி, யாரேனும் கொன்றிருப்பின் அவன் உண்மையை உரைப்பீர். அவனுக்குத் துன்பம் ஒன்றும் செய்யேன். நாடுகடத்தப்படுவான் என்பது ஒன்றே.

[அதைக் கேட்டோர் வாய்திறவாதிருக்கின்றனர்.]

இங்குள்ளோர் வாய்திறவாதிருப்பின், பின்னர் கொலைக் காரனை மறைத்து வைத்திருந்த குற்றத்திற்குத் தலையினை வெட்டி வீழ்த்தும் கட்டளையிடுவேன். தெய்வங்களின் சாபம் இக் கட்டளையை மீறுவோர்க்காகுக. அவர்கள் நிலங்கள் விளையாதொழிக. மனைவிமார் பிள்ளைப் பேறற்றுக் கிடக்க. இன்று நிலவும் நோய் அவர்களைப்பற்றி அடியோடு ஒழிக்க.

முதியோன் (கோரஸ்): அரசே போபசு சொல்லிய அதனைத் திறனுடன் விளிசெய்வதும் அவனே.

ஒதிபன் : தெய்வம் சொல்லாத ஒன்றைத் தெரிவித்தல் என்பது மனிதரால் ஆவதில்லை.

கோரஸ் : ஆயின், யான் சொல்வதொன்றுண்டு.

ஒதிபன் : சொல், கேட்போம்.

கோரஸ் : போபசுத் தெய்வத்திற் கடுத்திருப்பது திசேசியத் தெய்வம். அது இதுபற்றித் தெளிவுபடுத்தக் கூடும்.

ஒதிபன் : அது எனக்குத் தெரியாததொன்றன்று. இருமுறை கேட்டும் தெரிந்தபாடில்லை.

கோரஸ் : யான் செவிவழிச் செய்தி யொன்று கேட்டேன். அது கட்டுக்கதையோ என்று அஞ்சுகிறேன்.

ஒதிபன் : கட்டுக் கதையா ? வெளியிடு ; கேட்போம்.

கோரஸ் : இலேயஸை வழியில் எதிர்ப்பட்டோர் கொன்றனர் என்றனர்.

ஒதிபன் : யானும் கேட்டேன். தெரிந்தவர்கள் யாரேனும் இருப்பரேல் சொல்லுக.

கோரஸ் : தெரிந்த ஒருவனை இப்போது அழைத்து வருகின்றனர். அவன் வருவதுரைக்கும் வாய்மையாளன்.

[திரிசியன் வருகிறான். அவன் குருடனாதலின் ஒருவன் அழைத்து வருகிறான்.]

ஒதிபன் : திரிசிய, உனக்குத் தெரியாததில்லை என்பது யாங்கள் அறிந்ததே. உன் உள்ளொளியினால் எங்களுக்கு அருளுக. கொன்றவன் யாவன் என்று எங்களுக்குச் சொல்லுக.

திரிசியன் : நல்ல சொற்கள் தாம். அறிவுந்திறனும் நல்லது செய்யா ஆயின் சொல்லாதிருந்து அதனால் நேரும் பொல்லாங்கினைப் பெறுவதே நல்லதாம். இங்கு யான் வராதிருந்தேனாயின் நன்றாம்.

ஒதிபன் : தீப நாட்டுக்குத் தீங்கினை விளைக்கும் நீ யார் ? உன் தந்தைதான் யாவன் ?

திரிசியன் : யான் சொல்வேனாயின் நினக்குத்தான் தீமை விளையும்.

ஒதிபன் : உனக்குத் தெரிந்தால் மறைக்காமல் சொல்லென்று வேண்டுகிறோம்.

திரிசியன்: நீ மயக்கங் கொண்டுள்ளாய். இம் மறைபொருள் என்னிடமே இருக்கக் கடவது.

ஒதிபன்: உனக்குத் தெரிந்த ஒன்றை வெளியிடுவதில் தடையென்ன? உன் நகரம் பாழ்படுவதை அறிந்திலையா?

திரிசியன்: உன்னையும் என்னையும் காப்பாற்றுதற்குத்தான் உண்மையை வெளியிட அஞ்சுகிறேன்.

ஒதிபன்: உண்மையை உரைப்பதற்கு அஞ்சுவானேன்? வீணுக முடிவுவரை முரட்டுத்தனத்துடன் இருக்க எண்ணமா?

திரிசியன்: என்னைக் குறை கூறுதே. உன் வீட்டைச் செப்பம் செய்துகொள்.

ஒதிபன்: கேட்டீர்களா, அரசனைக் கீழ்மைப்படுத்திய சொற்கள் முனிவனையும் முனியச் செய்வன.

திரிசியன்: நடக்கவேண்டுவது நடந்தே தீரும்.

ஒதிபன்: உறுவதுரைப்பது உன் கடமை.

திரிசியன்: இனி ஒன்றும் சொல்லேன். யாது வேண்டுமாயினும் செய்து கொள்.

ஒதிபன்: யான் என் மனத்தில் பட்டதைச் சொல்லவேண்டியவனகவிருக்கிறேன். நீ இச் சூழ்ச்சியில் கலந்துள்ளவனக நினைக்கிறேன். இக் கொலை உன் கையால் செய்யப்பட்டது என்றும் சொல்கிறேன்.

(தொடரும்)

நன்கு வாழ்வீர்!

[நாஞ்சில், கா. கணபதி]

தெய்வ மொழியாம் தமிழினிலே
தேங்கிக் கிடக்கும் அருள்வழிகள்
உய்வைத் தருமென் றுணராமல்
உலகில் சுழலும் மதியிலிகாள்!
நைவைத் தருந்தீ நெறிசேரும்
நாத்திகர் வழியை நணுகாமல்
தெய்வ அருள்சேர் தமிழ்வழியில்
தெரிந்து நன்கு வாழ்வீரே.

திருக்கயிலை சென்று திரும்பிய அடிகள்

திருக்கயிலாய பரம்பரைத் திருத் தருமபுர ஆதீனத்து இருபத்தைந்தாவது குருமகா சந்நிதானம் சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சாமிகள் அவர்கள் மெய்யன்பர்களும் திருமடச் சுற்றமாகிய பரிவாரங்களும் தம்மைப் புடைசூழச் செலற்கரிய கயிலையினைத் திருவருளால் சென்று கண்ணாரக் கண்டு வழிபட்டு மீண்டருளினர். இத்தகைய திருவருள் வழிச் செலவு பொருவரு சிவ புண்ணியமும் போற்றரு விழுத்தவமு மாகும். இக் கயிலை வழிச் செலவுக்கு அடிகள் மேற்கொண்டருளிய அருட்பணிகள் அளப்பில. அவைகளுள் தலைசிறந்ததும் உயிர்நிலை யாயதும் எது எனின்? திருமுறை யோதும் திருப்பணியேயாம். பண்டுபோல் இந்நாளிலும் திருமுறை யோதுதல் பிறவற்றான் எய்த முடியாத பெரும்பயனை எய்துவிக்கின்றதென்பதனை உலகோர் கண்டு கைக்கொண்டு அதனை ஓதியுய்ய உறுதுணையா வது அடிகளார் மீட்சியின் அருங்காட்சியாகும்.

அடிகளார் முன்னர் பல திருவூர்களை வழிபட்டுப் பண்பட்ட வர்கள். திருக்கேதாரம், பசுபதிநாதம், அமரநாதம் என்னும் முப்பெருந் திருவூர்களை வழிபட்டு வணங்கிய குணஞ்சால்சீலர். ஆண்டொன்றாக அருங்கயிலை செல்லுதல் வேண்டுமென்னும் திருவுள்ளத்தால் ஆதினச் சொக்கலிங்கப் பெருமான் திருமுன் "திருக்கயிலைத் திருப்பதிகம்" ஒல்லும் வகை ஓவாது உளங்கனிந் தோதியும் ஓதுவித்தும் திருமுறைத் திருத்தொண்டாற்றி வந்தனர்.

1959 ஜுன் திங்கள், 19 ஆம் நாள் திருக்கயிலை வழிநடை திருவருட்டுணையால் துவங்கப்பெற்றது. அப்பர் பெருமானுக்கு ஆண்டருளிய சிவபெருமான் திருக்கயிலைத் திருக்காட்சியினை நல்கி யருளிய திருவையாற்றிறைவற்குத் திருமுறையோதிச் சிறப்பு வழிபாடியற்றிப் புறப்பட்டருளினர். பின் திருக் காசியினை எய்தினர். உடனழைத்துச் சென்ற தென்றமிழ்நாட்டு அந்தணர்களைக் கொண்டு ஆகம முறைப்படி காசிச் சிவபெருமா னுக்கு வழிபாடியற்றினர். பின் பல திருவூர்களையும் வழிபட்டு 'நைநிடால்' வந்து சார்ந்தனர். அங்குக் "கீதா சங்கத் தலைவர் திரு. வித்தியானந்த சரசுவதி அடிகளா"ல் வரவேற்கப்பட்டனர். இப் பெரியார் பன்னூலாசிரியர்; பன்மொழிவல்லார். பண்டு மைசூர் மாநிலத்தைச் சார்ந்தவர். இருபதுமுறை திருக்கயிலை

சென்று திரும்பிய செம்மலார். மானசசரோவரப் பகுதிகளில் தங்கி நல்ல பழக்கமுடையவர். அவர் வழித் துணையாக்கொண்டு வழிநடை தொடங்கப்பட்டது. அப் பகுதி ஆளுநர் தென்றமிழ் நாட்டுத் திருவினர் வி. வி. கிரியாவர். இவர்தம் அணுக்கச் செயலர் வாலையானந்தர், நீலகண்டன் முதலியோராவர். ஆளுநர் அடிகளை நன்கு வரவேற்றனர். நல்விருந்தாற்றினர். ஆட்சி எல்லையிலும், புறத்திலும் வேண்டுந் துணைபுரிய வேண்டுவ செய்தமைத்தனர்.

உந்து வண்டியில் புறப்பட்டனர். அல்மோரா வழிச் சாகேசுவரம் அல்மோரா, சோமேசுரம், வைத்தியநாதம், கௌசானி, பாகேசுரம் சென்று வழிபட்டனர். பாகேசுரத்தில் கருட கங்கையும், சரயு நதியும் கூடுகின்றன. வழியில் தேவ்பகோர் அடைந்தனர். இராம கங்கை ஆறு கடந்தனர். கிர்காமைக் கிட்டினர். டிக்சனை யொட்டிக் காலாமுனி என்ற பெருஞ் சிகரம் இருக்கிறது. இங்கில்லாத மூலிகைகள் எங்குமில்லை. இங்கு ஆட்சித் துறையினர் "சித்த மருத்துவ ஆராய்ச்சி நிலையம்" ஒன்று ஏற்படுத்தியுள்ளார்கள். நிலைத்திணை இன ஆராய்ச்சியாளர்கள் பலர் இங்கே வந்து நல்ல பயன் பெறுகின்றார்கள்.

மிலம், புகுதியார் என்னும் இடங்களில் குகைகளில் இரவுகளைக் கழித்தனர். பின் மர்த்தோலி வந்தனர். இங்கு நந்தாதேவி, நந்தகோட், திருசூலி முதலிய புனித சிகரங்கள் காட்சியளிக்கும். பின் 'மிலம்' என்னும் இந்தியநாட்டுக் கடைசிச் சிற்றூரை வந்தடைந்தனர். இவ்வூர் உலகப் பெரும்பனியுறைவிடங்களினெல்லாம் மிகப் பெரியதாகும். இவ்வூரில் வணிகர்கள் பலர் தீபேத்துநாட்டு வாணிகத்தின் பொருட்டுத் தங்கியுள்ளனர். இவ்வூரில் சோதனை இடங்களும், அடையாளச் சீட்டு நல்குமிடங்களுமுள்ளன.

உண்டாதூர, செயந்தி, குங்கிரி, பிங்கிரி முதலிய கணவாய்களைக் கடந்து மாலாசிலாங்கை யடைந்தனர். இதற்கு மேல் தீபேத்தியநாட்டு மொழி கற்றாரின் துணை இன்றியமையாததியாவர்க்கும். அத்தகைய வழிகாட்டி இருவரின் துணையுடன் புறப்பட்டனர். 'துங்'கென்னும் பகுதியில் தங்கினர். சயந்திக் கணவாயின் முடிவிடத்தில் தேநீர்க்கடை யொன்றுண்டு. அங்குத் தேநீர் அருந்திப் புறப்பட்டனர். பிங்கிரிக் கணவாயின் உச்சிப் பகுதியில் அமரநாதனைப் போலப் பனிப் படிவாலே அமைந்த சிவலிங்கத் திருமேனி காணலாம். அதற்குமேல் மயன்படைப்போ என்றையுறும் மாண்பினதாய கோட்டை மதில், கோவில் விமானங்கள், மண்டபங்கள், கோபுரங்கள்

போன்ற அமைப்புடைய மலைச் சிகரங்கள் பலவும் காட்சியளிக்கின்றன. மூவாயிரவடிச் செங்குத்தான உயரம் ஏறியதும் கயிலாயநாதன் காட்சியைத் தொலைவாகக் கண்குளிரக் காணலாம். கயிலாயத்தின் முன் கோபுரம் போன்று காணப்படுவது இக் கணவாய். இதனைக் கடந்து சிர்ச்சின் பகுதியை வந்தடைந்தனர்.

இங்கிருந்து பத்துக்கல் அளவுக்கு இந்திய எல்லை. இதற்கு மேல் திபேத்தியப் பகுதி. பின் தசாங், சுகாடு, கிருக்கியம் முதலிய பகுதிகளைக் கடந்து தீர்த்தபுரி வந்தடைந்தனர். இதனைப் பஸ்மாசுர சம்ஹாரம் நிகழ்ந்த இடம் என்ப. இங்கு வெந்நீர் ஊற்றுத்தீர்த்த முள்ளது. இங்கிருந்து புறப்பட்டு நான்காவது நாளில் திருக்கயிலையின் மேற்கு வாயிலை வந்தடைந்தனர். திருக்கயிலைத் திருமுறைத் திருப்பதிகம் ஓதினர். இம் மேற்கு வாயிலுக்குத் திபேத்து மொழியில் 'நியான்றி' எனவும், செந்தமிழ் மொழியில் 'நந்திமுகம்' எனவும் வழங்கப்படுகின்றது.

திருக்கயிலைச் சிவபெருமானின் திருத்தோற்றம் அனைத்துலக அன்னையத்தன் (விராட்லிங்கம்) வடிவமாகும். இத் தோற்றம் பனி உறைவு பெற்றதாக முன்னே உள்நந்தி, பல மண்டபங்கள், நிருத்த சபை அமைப்புக்கள், கொடிமரம், பலி பீடம் முதலியவற்றுடன் இயற்கையாக எழிலோங்கித் திகழ்கின்றது. கயிலைப் பனியுறைவுகளிலிருந்து அங்கங்கும் பல சிற்றருவிகள் விழுந்த வண்ணமாகவே யிருக்கின்றன. திருக்கயிலையின் மேற்கு வடக்குக் கிழக்கு ஆகிய முப்புலங்களிலும் யாறுகள் சூழ்ந்து ஓடுகின்றன. இவை தென்பால் வந்து ஒன்று கூடி இராட்சதத் தடாகத்தைச் சென்றடைகின்றன. சிவபெருமான் மேற்குத் திருமுகமாகத் தோற்றம் அளித்தருளுகின்றனன். வடகிழக்கு மூலையில் கௌரிகுண்டம் அமைந்துள்ளது. நான்கு திருச் சுற்றுக்களும் முப்பத்திரண்டுகல் தொலைவுள்ளன. உள் சுற்றும் ஒன்றுண்டு. வெளிச்சுற்று - வெளிப்பரிக்கிரமம். உட்பரிக்கிரமம் - உட்சுற்று. வெளிச் சுற்றினைப் பன்னிருமுறை வலம் வந்தவர்களையே உட்சுற்றினுட் புக இசைகின்றனர். கயிலைப் பகுதிமட்டும் பூடானிய ஆட்சியுளிருக்கின்றது. நான்கு திருமுகங்களுக்கும் நான்கு திருமடங்களும் தெற்கு முகத்தில் உட்சுற்றுத் தொடங்குமிடத்தில் ஐந்தாவது திருமடமும் உள்ளன. இவ்வைந்து திருமடங்களும் பௌத்த மடங்களாகும். இங்குள்ளவர்கள் திருக்கயிலைச் சிவபெருமானை முறைவைத்து வழிபாடு செய்து வருகின்றனர். பௌத்தமும் வைதிகமும் கலந்த ஒரு சமயம் லாமா மதம். வைதிகக்கிரியைகள் மிகுதியாகவுள்ளன என்ப. திருக்கயிலை சிவசத்தியாக வழிபடப்படுகின்றது. வெளிச் சுற்றுச் சுற்றிவர நம்மனோர்க்கு நான்கு நாள் செல்லும் என்ப.

திபேத்திய அன்பர்கள் காலால் நடந்து வலம் வருகின்றனர். உருண்டு வலம் வருகின்றனர். வீழ்ந்தெழுந்து வீழ்ந்தெழுந்து வலம் வருகின்றனர். அருந்தவப் பெருமைசால் முனிவர்கள் பலர் ஒரே நாளில் நான்கு சுற்றுக்களையும் வலம் வந்து விடுகின்றனர்.

குருமகா சன்னிதானமவர்களும் உடன் செல்லும் பேறு பெற்ற மெய்யன்பர்களும் செப்டெம்பர்த் திங்கள் துவக்கத்தில் திருக்கயிலை வழிபாட்டினைத் திருவருட் பெருந்துணையால் நிறைவேற்றிக் கொண்டு நல்ல நலத்துடன் சென்னைக்கு எழுந்தருளினர். அப்பொழுது சென்னையின் மைய நிலையத்தில் உயர் மன்றநடுவர் உயர்திரு, என். சோமசுந்தரம் அவர்கள், உயர்மன்ற நடுவர் உயர்திரு, சுப்பிரமணிய நாடாரவர்கள், உயர்திரு எஸ். சச்சிதானந்தம் பிள்ளையவர்கள் முதலிய மெய்யன்பர்கள் பலரும் பெருமக்கள் திரளும் ஒருங்கு குழுமி வாழ்த்தி வணங்கி வரவேற்றனர். அடிகளும் ஆசிமொழிந்தருளினர்.

வாழ்க அடிகள்! வாழ்க தருமையாதீனம்! வாழ்க தமிழ் மொழி! வாழ்க சிவனெறி!

தமிழகப்புலவர்குழு மூன்றுவது கூட்டம்

நிகழும் புரட்டாசித் திங்கள் கஅ ஆம் நாள் (5-10-59) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் க மணிக்குச் சங்கம் வளர்ந்த தனிநகர் ஆகிய மதுரையில் தமிழ்ச் சங்கக் கட்டடத்தில் தமிழகப் புலவர்குழுக் கூடியது. உயர்திரு கருமுத்து. தியாகராசச் செட்டியாரவர்களைத் தலைமை தாங்கும்படி அக்குழு அமைப்பாளர் திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் வேண்டினர். அவர்கள் தலைமைதாங்கி வரவேற்புக்கூறி முதலில் நாவலர், கணக்காயர் ச. சோமசுந்தர பாரதியார் அவர்கள் எண்பத்தொன்றும் ஆண்டு விழா வாழ்த்துரை வழங்கினர். புலவர் குழுவிற் பலர் வாழ்த்துரை கூறினர். அவ்வாழ்த்துரைகட்கு, நாவலர் பாரதியார் நன்றியும் வாழ்த்தும் கூறினர். பின்னர் அந்நாளில் நிகழக் குறித்திருந்த தமிழ்மொழிச் சீர்திருத்தங்கள் பல ஆய்ந்து முடிவுசெய்யப்பட்டன. நடுப்பகல் கருமுத்து தி. அவர்கள் தம் இல்லத்திற்குப் புலவர் குழுவினரை அழைத்து விருந்தளித்துப் பொன்னாடை போர்த்திச் சிறப்புச் செய்தனர். பின் மீண்டும் வந்துகூடி எஞ்சியிருந்த திருத்தங்களை முடிவுசெய்தது அக்குழு. மாலை ஐந்து மணிக்கு அந்நகர் இளைஞர் கூட்டம் வந்த புலவர் அனைவரையும் திறந்த ஊர்தியில் ஏற்றி ஊர்வலமாக அழைத்துச் சென்றது. நகரவையோர் கூட்டம் தமது கட்டடத்திற்கு அழைத்து வரவேற்பிதழ் வாசித்து அளித்தது. பின் திலகர் திடலில் நகரமக்கள்கூடி வரவேற்பிதழ் வாசித்து வழங்கினர். அவ்வரவேற்புக்கு நன்றியும் வாழ்த்தும் புலவர் குழுவினர் கூறிப் பின் பத்துமணிக்குக் கூட்டம் கலைந்தது. தமிழகம் வாழ்க! தமிழகப் புலவர் குழுவாழ்க!!

கள்வனும் களவனும்

[வித்துவான், ஆ. சிவலிங்கனுர், மயிலம்]

"யாரு மில்லைத் தானே கள்வன்
தான து பொய்ப்பின் யானெவன் செய்கோ
தினைத்தா ளன்ன சிறுபசுங் கால
ஒழுகுநீ ராரல் பார்க்கும்
குருகு முண்டுதான் மணந்த ஞான்றே." (குறுந். உரு)

இது 'வரைவு நீட்டித்த விடத்துத் தலைமகள் தோழிக்குச் சொல்லியது' என்னும் துறைப் பொருளது.

"தலைவன் என்னொடு கலந்த காலத்தில் வேறொருவருமில்லை; என் உளம்கவர் கள்வனாகிய தானே அங்கிருந்தவன்; தான், அன்று, 'பிரியேன்; பிரியின் ஆற்றேன்' என்று ஆணையுடன் கூறிய அச் சூள் பொய்ப்பானாயின் யான் யாது செய்ய வல்லேன்; தினைத்தாள் போன்ற சிறு பசுங் கால்களுடைய குருகும் அன்று இருந்தது."

என்பது இப் பாடலின் பொருளாம். இப் பாடலில் 'கள்வன்' என்பதற்குப் பதிலாகக் 'களவன்' என்ற பாடம் கொண்டார்கள் மகாவித்துவான், திரு. இரா. இராகவ அய்யங்கார் அவர்கள். 'களவன்' என்பதற்குச் 'செய்தி நிகழ்ந்த களத்திருந்த சான்றாயினான்' எனப் பொருள் கொண்டு,

"களவன் நடுச் சொல்வோன் என்பது திவாகரத்தினும் காணலாம்; கள்வன் பொய்ப்பின் யானெவன் செய்கோ வென்பது இயைபுடைத்தன்று, கள்வன் பொய்த்தல் இயல்பாகலால். பல்லோர்க்கு நடுச் சொல்லும் களவனை தலைவன் என்பாற் பொய்ப்பின் யானெவன் செய்கோ என்பதே இயல்புடையதாதல் நன்கு நோக்கிக் கொள்க."

(குறுந்தொகை விளக்கம் பாடல் உரு)

என்று சிறப்புரையும் எழுதினார்கள். கள்வன் பொய்த்தல் இயல்பாதலால் 'களவன்' என்ற பாடம் சிறக்கும் என்பது அமைதியாகவே தோன்றுகின்றது. திரு. டாக்டர், அ. சிதம்பரநாதச் செட்டியார் M A., Ph. D. அவர்களும் இப் பாடம் சிறக்கும் எனப் போற்றினார்கள். 'கள்வன்' என்ற பாடமும் சிறக்கும் என்று எண்ணுகின்றேம்.

தலைவி, கள்வன் இயல்பில் தலைவனைக் கூறவில்லை. தலைவன் கள்வனாயினும் பொய்க்கமாட்டான் என்ற கருத்துப் படவே 'தானது பொய்ப்பின்' என்றாள். 'பொய்ப்பின்' என்ற சொல் 'பொய்க்கமாட்டான்' என்றதை உட்கொண்டதாம். கள்வன் இயல்பிலேயே கூறினாள் எனின் 'தானது பொய்ப்ப யானெவன் செய்கோ' என்று கூறியிருப்பாள். யாருமில்லா விடத்தில் மணந்தவனாதலின் தலைவனைக் கள்வன் என்ற சொல்லால் குறித்தாள். என்றாலும் அவன் பொய்க்கமாட்டான் என்பதற்காகப் 'பொய்ப்பின்' என்றாள். தன் மனம் கவர்ந்த அளவிலும் யாருமில் ஒரு சிறையில் மணந்த அளவிலும் கள்வன் ஆவான் என்பது தலைவியின் எண்ணம் என்பதை 'மணந்த ஞான்று' என்ற சொற்கள் தெளிவுபடுத்தும். மணத்தல் இரண்டறக் கலத்தல். அதனால் பொய்யைக் குணமாகக் கொண்ட கள்வன் என்று கூறவில்லை அவள். அவன் பொய்க்கமாட்டான் என்பதற்கு மணந்த செயல் தன்னுடையதாகக் கூறாமல் 'தான் மணந்த ஞான்று' என அவனுடையதாகக் கூறினாள். வரைவு நீட்டித்தலின் தலைவன்பால் தனக்குத் தோன்றிய வருத்தம் வெளிப்பட அவனைக் கள்வன் என்றாள். 'களவன்' என்று கூறின் அவ் வருத்தம்—தலைவனைப்பற்றிய வருத்தம் வெளிப்படாது.

'ஒழுகுநீர் ஆரல் பார்க்கும் குருகுமுண்டு' என்பதும் 'கள்வன்' என்ற பாடத்துக்குத் துணை செய்யும். தான் மணந்த ஞான்று குருகுமிருந்தது. அக்குருகும் "ஒழுகு நீரில் ஆரல் பார்த்த நிலையில் இருந்ததாதலின் தான் மணந்ததை யறியாது. ஒரு வேளை யறிந்ததாயினும் என் பக்கமாகச் சான்று கூறாது. ஏன் எனின் ஆரலை அதன் வருத்தம் அறியாது உண்ணும் இயல்பினதாதலின் என் வருத்தமும் அறியாமல் வரைவு நீட்டித்த தலைவன் பக்கமே சான்று பகரக்கூடும். தன்னொத்த இயல்பினரோடே சார்தல் உலகியல்." இவ்வாறு தலைவி கூறுவது போன்றமைந்துளது "தினைத்தாள்........குருகுமுண்டு" என்ற கருத்து.

'குருகும் உண்டு' என்று கூறவந்தவள் குருகின் காலைப் பற்றிக் கூறினாள். தினைத்தாள் ஒப்ப நீண்ட மெல்லிய கால்கள் குருகுக் குண்டு. அதனால் தினைத்தாளன்ன சிறு பசுங்கால் என்றாள். குருகு ஓடுமீன் ஓட வுறுமீன் வருமளவும் வாடியிருக்கும் இயல்பினது. எவ்வளவு காலமாயினும் பெரிய மீன் வருமளவும் நின்றுகொண்டிருந்து வந்தபின் அம் மீனைக் கொத்தியுண்ணும். அதுபோலத் தலைவனும் இயற்கைப் புணர்ச்சியில் தகுதியுடைய தன்னைக் காலம் வரும் துணையும் இருந்து கூடினான். பின்னரும் களவிற் கூட்டத்துக்கெல்லாம் தன் கால் கடுக்க நடந்து வந்து கூடினான். வரவை மட்டும் நீட்டினான்.

தன் காரியம் ஒன்றையே கருதியவனாய் இருத்தலின் அவன் கள்வன் என்றாள். இவற்றால் 'களவன்' என்ற பாடத்தினும் 'கள்வன்' என்ற பாடம் சிறக்கும் என்னலாம்.

இனிக் குருகுபற்றித் திரு. அய்யங்கார் அவர்கள் கூறுவது காண்போம்.

> "குருகு ஆரல் மீனைப் பார்த்தலால் எம்மைப் பார்த்த தென்று சொல்லேன். யாரும் பார்த்தலுண்டோ வென யான் பார்த்தபோது குருகு உண்மையை யான் கண்டேன். குருகு பாராதாயினும் அக்களத்தின் அவன் சூளுரைத்தது கேட்டதேயாம் என்று 'குருகு முண்டு தான் மணந்த ஞான்றே' என்றாள்."

இவ்வாறு அவர்கள் கூறினார்கள். குருகு தலைவன் கூறிய சூள் உரையைக் கேட்டது என்றது பொருந்துவதில்லை; ஒழுகு நீரில் ஆரல் பார்த்திருந்த அதன் மனம் காதுவழிச் செல்லாது கண் வழிச் சென்றதாதலின் என்க. தலைவன் சூளுரைத்தது கேட் டிருப்பின் அது ஆரல் பார்ப்பதைவிட்டு அஞ்சிப் பறந்திருக்கும். அது கேளாமையினால் தான்—மனம் காதுவழியின்றிக் கண்வழி நின்றமையினால்தான் ஒழுகு நீரில் ஆரல் பார்த்திருந்தது.

குருகு ஒழுகு நீரில் ஆரலைப் பார்த்தது. நிற்கு நீரிலாயின் ஆரல் வந்து தப்புமாயின் மீண்டும் வரலாம் ஒழுகு நீரிலாயின் அவ்வாரல் நீருடனே ஒழுகித் தப்பும். மீண்டும் தன் கண் காணு மளவில் வரும் என்பது உறுதியில்லை. ஆதலின் தன் பார்வை யில் மனதை ஊன்றிச் செலுத்தவேண்டும். ஐந்து போறிவும் கண்களே கொள்ளும்படி யிருக்கவேண்டும். அதனால் அது சூள் கேட்டிராது என்னவேண்டும். குருகும் உண்டு என்னுமிடத் தில் உம்மையானது, 'கள்வன் உண்டு' என்பதைத் தழுவிய எச்ச உம்மையாயினும், வெறுப்புக்குரிய அல்லது பயனற்ற ஒருவனை உண்டு என்னும்போது 'அவனும் உண்டு' என்று கூறுவதுபோல இழிவு நிலையை உணர்த்துவதாகவும் உள்ளது.

இனிக் 'களவன்' என்ற பாடம் கொள்வதில் வரும் வேறு பொருளைக் காண்போம். 'களவன்' என்பதற்கு 'நண்டு என்பதும் ஒரு பொருள்.

> "களவன் குளிர் ஞெண்டு கற்கடகம் அட்டை
> சௌகம் கறையான் சிதல்." (உரி. நிகண்டு. விலங்கு 26)

என்பது உரிச்சொல் நிகண்டு. அதற்கேற்பவும் பொருள் கூறலாம்.

"தலைவன் என்னோடு கலந்த காலத்தில் யாருமில்லை. களவன் (நண்டு) தானே யிருந்தது. அக் களவன் தலைவன் கூறிய சூளுரையைத் தான் கேட்டபடி கூறாது பொய்ப்பின் யான் யாது செய்யவல்லேன் அக்களவன் மட்டுமன்றிக் குருகும் ஆங்கிருந்தது."

இவ்வாறும் பொருள் கொள்ளலாம். "அரும்பற மலர்ந்த" என்னும் குறுந்தொகைப் பாடலில், தோழி அறத்தொடு நின்ற போது, "கடுவனும் அறியும் அக் கொடியோ னையே, தன் கண் கண்டது பொய்க்குவ தன்றே" எனக் கூறியதைக் காணின் அஃறிணைப் பொருள்கள் சான்று கூறுவனவாகக் கூறும் மரபு அகப்பாக்களில் உண்டென்பது பெறப்படும். "கதிர்மூக் காரல் களவனொடு" (அகம் உசசூ) என்பது அகப்பாட்டில் உள்ளது. அவ்வகையில் தலைவி தோழியிடம், 'தான் மணந்த ஞான்று களவன் (நண்டு) இருந்தது; அக் களவன் பொய்ப்பின் யான் எவன் செய்கோ' என்றாள். சான்று பகர்வதற்கு ஒருவரினும் இருவர் இருத்தல் சிறப்புடையதாம். அதற்கேற்ப இரண்டாவது சான்றாகக் 'குருகும் உண்டு' என்றாள்.

இதுவரை கூறியவாற்றால் 'களவன்' என்ற பாடம் அமைதியுடையதே எனினும் 'கள்வன்' என்ற பாடம் சிறக்கும் என்பதும் 'களவன்' என்பதற்கு 'நண்டு' என்பதும் ஒரு பொருளாதலின் அதற்கேற்பவும் பொருளுரைக்கலாம் என்பதும் போதரும்.

தமிழ் கற்றவை

[மேட்டூர்—தேன்மழை]

1. தாமரை

"திங்களைப் போற்றுதும்! திங்களைப் போற்றுதும்" என்
றெங்கள் சிலம்படியை ஏற்றுணர்ந்து—அங்ஙனமே
காமருகை கூப்பிக் கலைநிலவைப் போற்றுவதாம்
தாமரையாள் கற்ற தமிழ்.

2. ஆவினம்

எங்குப் பிறக்கினும்என்? இன்சுவைப் பால்சுரக்கும்
தங்குபுகழ் ஆவினமே! செல்வமே!!—அங்கம்
முழுதங் குலுங்கிட "அம் மா" வென்பீர்! சொல்லீர்,
தொழுதெங்குக் கற்றீர் தமிழ்?



திருநெல்வேலி, திரு. இரா. ந. குற்றாலலிங்கம் பிள்ளை
(ஆவியுலகத் தொடர்பாளர்) (Auto writer)

ஆவியுலகத் தொடர்பாளர் (Medium)

திருவாளர் இரா. ந. குற்றாலலிங்கம் பிள்ளை

இவர்கள் திருநெல்வேலி மாவட்டத்தில் நாங்குனேரிக் கூற்றத்திலுள்ள இராதாபுரம் என்னுஞ் சிற்றூரில் பிறந்தவர். இவருக்கு இப்போது அகவை முப்பத்தெட்டாகும். இவர் பள்ளி இறுதி வகுப்புவரையிலுங் கற்றவர். இவர் திருநெல் வேலிக் கீழத் தேர்த் தெருவில் சிறிய மளிகைக் கடையொன்றை நடத்தி வருகின்றனர்.

இவர் நண்பர் திரு. கந்தையா பிள்ளைவழி இவருக்கு ஆவி களோடு தொடர்புகொள்ளும் வாய்ப்புக் கிடைக்கப்பெற்று ஏறக் குறையப் பத்துத் திங்களாயிற்று. இவர் ஒருநாள் மறைத்திரு மறைமலையடிகளார் எழுதிய 'தொலைவிலுணர்தல்' என்ற நூலைப் படித்துக் கொண்டிருந்தபோது ஆவியுலகவாணராம் அம்மறை மலையடிகளோடு தொடர்பு கொள்ளும் வாய்ப்பு இவருக்குக் கிடைத்தது. இவர் சிவ வணக்கஞ் செய்து ஆவியுலகுத் தலைவரை வேண்டி எந்த ஆவியை நினைப்பினும் அந்த ஆவி இவரிடம் வந்து பேசுகிறது. அவ்வாவி தம்முள் நின்றுணர்த்துவதை அப்படியே தாளில் எழுதிவரும் ஆற்றல் (Auto writing) இவருக்குத் திரு வருளால் ஏற்பட்டுள்ளது.

செந்தமிழ்ச் செல்வி ஆசிரியரும் கழக ஆட்சியாளருமாகிய திரு. வ. சுப்பையா பிள்ளை திருநெல்வேலிக்குச் சென்றிருந்த போது 12-5-59இல் திருவாளர் குற்றாலலிங்கம் பிள்ளை அவர்கள் வழி மறைத்திரு மறைமலையடிகளாரோடும், தம் அருமை அண்ணர், அண்ணியாரோடும் பேசினர். அதன் பின்னர் ஆகஸ்டுத் திங்களில் திருநெல்வேலிக்கும், திருக்குற்றாலத்துக்கும் சென்றிருந்தபோதும் அடிகளாரோடு பேசியுள்ளனர். அதோடு அடிகளாரே திரு. குற்றாலலிங்கம் பிள்ளையவர்களை 'இயக்கித் தாமாகவே திரு. சுப்பையா பிள்ளைக்குச் செய்திகள் அனுப்பி வருகின்றனர். மேலும், ஆவியுலகில் வாழும் அடிகளாரும், கழக முன்னாள் அமைச்சர் திருவரங்கனாரும், அவர் தம் இல்லக் கிழத்தி நீலாம்பிகையாரும், மறைத்திரு ஞானியாரடிகள், திரு. வி. க., கவி சுப்பிரமணிய பாரதியார், கவிமணி தேசிகவிநாயகம்

பிள்ளை, திராவிடக் கவிமணி வே. முத்துசாமி ஐயர் ஆகியோரும் 13-9-59இல் சென்னையில் நடைபெற்ற மறைமலையடிகளார் நூல் நிலையத்தின் முதலாண்டு விழாவுக்கு வாழ்த்துரைகள் வழங்கி யுள்ளனர். மேலும், அடிகளாரின் ஆசிரியர் சோமசுந்தர நாயகர், மேஷை பா. வே. மாணிக்க நாயக்கர், பல்கலைப் புலவர் திரு. கா. சுப்பிரமணிய பிள்ளை, அருட்டிரு இராமகிருட்டிண பரமஅம்சரின் மாணவர் மறைத்திரு அபேதானந்தரடிகள் ஆகியோர் அறிவுரை கள் அனுப்பியுள்ளனர். ஆவியுலகு பற்றித் திரு. வ. சுப்பையா பிள்ளை கேட்ட பத்தொன்பது கேள்விகளில் முதல் நான்கு கேள்விகட்கு மட்டும் 44 பக்க அளவில் மறைமலையடிகளார் விடை எழுதி அனுப்பி யிருக்கின்றனர். எஞ்சிய கேள்விகட்கும் விடைகள் எழுதப்படுகின்றனவாம். மேலும் அடிகளார் உல கோர்க்குவேண்டும் பல அரிய செய்திகளை அனுப்பி வருகின்றனர்.

இத்தனையும் பெறுதற்குத் திரு. குற்றாலலிங்கம் பிள்ளை யவர்களிடம் திருவருளால் அமைந்துள்ள சத்தியே காரண மாகும். அத்தகைய சத்தி பெற்றவர்கள் எங்கிருப்பினும் மறைத் திரு மறைமலையடிகளார் தாம் தொடர்புகொள்ள விரும்புவதா யுரைக்கின்றார்கள்.

அடிகளார் இப் பூவுலகில் வாழ்ந்த காலை எழுதிய 'மரணத் தின் பின் மனிதர்நிலை,' 'தொலைவிலுணர்தல்' என்ற நூல்களா லும், மதுரை ஆதீனம் எழுதிய 'இறந்தவர்கள் வாழும் நிலை' என்ற நூலாலும் ஆவியுலகுபற்றி நன்குணரலாம். மேலை நாட் டறிஞர் சிலர் ஆவியுலகுபற்றிப் பல நூல்கள் எழுதி வெளி யிட்டிருக்கின்றனர். நம் பழந்தமிழ் நூல்களிலேயும் இவை மறை போல அரிய குறிப்புக்கள் பல இருக்கின்றன.

ஆவியுலகுச் செய்திகள்பற்றி ஐயுறுதற்கோ வியப்புறு தற்கோ ஒன்றுமில்லை.

மறைத்திரு மறைமலையடிகளார் அம்மை அம்பலவாணர் ஆணைகொண்டு அரிய பல அறிவுரைகளையும் அறவுரைகளையும் இப்பூவுலகிற்கு வழங்கி மக்கள் நல்வாழ்வு வாழ வழிகாட்டுவார்கள் என்று நம்புகிறோம்.

மோக்கணீசுரன் கதை

[திரு. சு. அ. இராமசாமிப் புலவர்]

கொங்குவள நாட்டிலே ஒருகாலத்தில் இருவர் வழிப் பயணஞ் சென்றுகொண்டிருந்தனர். அவர்கள் அத்தானும் மைத்துனனுமான உறவுடையவர்கள். அத்தான் சிறந்த சிவ நேசச் செல்வர். இறைவழிபாடு செய்தன்றி உணவுகொள்ளார்.

வழிப்பயணஞ் செய்த அவர்களிடங் கட்டுச்சோறு இருந் தது. மைத்துனனுக்குப் பசி அதிகமாகவே "சாப்பிட வேண் டும்" என்றனன். சிவநேசரோ, "நான் இறைவழிபாடு செய்ய வேண்டுமே, ஈண்டுத் திருக்கோயில்கள் இல்லையே", என்றனர். அவர்கள் இருவரும் குதிரைமீது சென்றுகொண்டிருந்தனர்.

ஒரு சூழ்ச்சியைத் தன்னுடைய உள்ளத்தில் எண்ணிய மைத்துனன், "ஈண்டு ஒரு சிவலிங்கம் இருக்கின்றது. நீர் அக் குளத்தில் நீராடி நாட்கடன்களை முடித்துக்கொண்டு வாரும். அதனை நான் உமக்குக் காட்டுகிறேன்," என்றனன். மைத்துனன் கூறியவைகளைக்கேட்ட சிவநேசர் மெய்யென நம்பி நாட்கடனைச் செய்துகொண்டிருந்தார்.

மைத்துனன் தன்னுடைய குதிரைக்குக் கொள் கட்டும் பையில் மணலை நிரப்பிக் கட்டிச் சிவலிங்கம்போல மண்ணில் நட்டுப் பக்கத்தில் கிடைத்த மலர்களைப் பறித்து மாலையாகத் தொடுத்து அவ்விலங்கத்தின்மேற் சார்த்தினான். தன் மைத்து னர் வந்தவுடன், "சிவலிங்கம் அதோ இருக்கிறது; வழிபட்டு வாரும்," என்று கூறினான்.

சிவநேசர் சிவலிங்கம் இருந்த இடத்திற்குப் போய், "என்னை ஆட்கொண்டருள ஈண்டெழுந்தருளிய எம்பெரு மானே! எனக்கருள் புரிவீராக," என்று வேண்டிப் பல புகழ்ப் பாடல்களைப் பாடி மீண்டார். இருவரும் ஓரிடத்தில் உட்கார்ந்து உண்ணத் தொடங்கினர். மைத்துனன் தன் அத்தானாகிய சிவநேசரைப் பார்த்து, "நீர் தொழுது வந்தீரே சிவலிங்கம் அது நல்ல சிவலிங்கம்" என்று கூறி நகைத்தனன். சிவநேசச் செல்வர், "செய்தி என்ன?" என்று உசாவினார். அதற்கு மைத்துனன், "அது சிவலிங்கம் அன்று. குதிரையின் கொள்ளுப் பை. இங்கே வாரும், உமக்குக் காட்டுகிறேன்," என்று கூறி; அழைத்துக்கொண்டுபோய்த் தான் நட்டுவைத்த கொள்ளுப் பையைத் தூக்கினான். அது மேலெழும்பவில்லை. மண்ணைப்

பறிக்கப் பறிக்க அடியுங் காணப்படவில்லை. சுயம்புமூர்த்தி யாகப் பாதாளம் வரையில் ஊடுருவி நின்றது. சிவநேசச் செல்வர் வியப்புக் கடலுள் ஆழ்ந்தனர். பலரும் இந்தப் புதுமையை வந்து பார்த்து வியந்தனர். இதனால் அக்கடவுளுக்கு "மொக்கணீசுரர்" என்று காரணப்பெயர் உண்டாயிற்று.

[இவ்வரலாறு கொங்கு மண்டல சதக உரைகாரரால் மேற்கோளாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.]

"ஏத்து சிவபத்தி யானொரு செட்டிமுன் ஈசுரனைத்
தோய்த்து முழுகித் தொழவெழ ஆங்கொரு சூழ்ச்சி கற்றோன்
பூத்த வனக்குடக் கோட்டூரில் மொக்கணி யைப்புதைக்க
வாய்த்த சிவலிங்கம் ஆனது வுங்கொங்கு மண்டலமே."

"மொக்கணி யருளிய முழுத்தழன் மேனி
சொக்கதாகக் காட்டிய தொன்மையும்."

என்பது திருவாசகம்.

தேனின்பம் அடைந்திடுமே!

[வெண்பாவூர், திரு. பொ. திருஞானம்]

கருங்கடல்நீர்ப் பரப்பின்மேல் கதிரொளிதான் உமிழ்ந்திடுமேல்
மருணீக்கும் மாட்சியதால் மனமதனில் லயித்திடுமேல்
புத்தெழிலாங் காட்சியினால் பூரிப்புத் தோன்றிடுமே!
எத்திசையும் ஒளியதனால் இன்பமிகப் பொங்கிடுமே! (1)

மருளூட்டும் கடலின்மேல் மலர்மதிதான் உதித்திடுமேல்
மருளகற்றும் தன்மையதால் மனமூன்றி நோக்கிடுமேல்
அல்லல்பல அகன்றதனால் அன்புமிகத் தோன்றிடுமே!
எல்லாமச் சக்தியினால் எழுந்துமிகத் தோன்றிடுமே! (2)

நீலநிற விண்ணின்மேல் நிறைமீன்தான் மினுக்கெனுமேல்
கோலநகை உதிர்ப்பதனால் கொடுமனமுங் கரைந்திடுமேல்
களிப்பருளுந் தன்மையினால் களங்கமிக அகன்றிடுமே!
தெளிப்புமிகு சிந்தையினால் தேனின்பம் அடைந்திடுமே! (3)

செய்திகளும் குறிப்புக்களும்

க. அஞ்சல்தலைகளில் திருவள்ளுவர் படம்

இந்திய அஞ்சல்துறை அமைச்சர் டாக்டர். பி. சுப்பராயன் அவர்கள், திருவள்ளுவர் படத்தையும் தேசிய கவி பாரதியாரின் படத்தையும் அஞ்சல் தலைகளில் பொறிக்க மைய அரசினர் திட்டமிட்டிருப்பதாகவும், பணவிடைத்தாள் (Money order), அஞ்சல் தாள்கள் ஆகியவற்றைத் தமிழிலும் பிறவட்டார மொழிகளிலும் அச்சிட ஏற்பாடு செய்திருப்பதாகவும் அண்மையில் தெரிவித்துள்ளார்

குறிப்பு: தமிழுக்கும், தமிழ்நாட்டிற்கும் ஆக்கந்தரும் இத்தகைய நல்லமுயற்சியைச் செய்யும் அமைச்சர் டாக்டர் சுப்பராயன் அவர்களைப் பாராட்டுகிறோம்.

உ. இயற்கைத்திங்களை அடைந்த செயற்கைத் திங்கள்

உருசியாவின் செயற்கைத் திங்களான லூனிக் 2, கடந்த 14-9-59 அதிகாலை 2-32 மணிக்குத் திங்கள் மண்டிலத்தை அடைந்தது. இது மணிக்கு 7 ஆயிரம் மைல் விரைவில் சென்று, இந்நிலவுலகிலிருந்து 2, 33, 600 மைல் தொலை இயற்கைத் திங்களை அடைந்தது. இச் செய்தியை மாஸ்கோ கோள்ஆய்வுநிலையத் தலைமை அதிகாரி அறிவித்தார்.

குறிப்பு: திங்கள் மண்டிலத்தை அடைய உருசியா செய்த முயற்சியும், அதில் அடைந்திருக்கும் முதல்வெற்றியும் உலகமக்களுக்கு மகிழ்ச்சியூட்டுவதாகும். உருசியரின் முயற்சி பெரிதும் பாராட்டத்தக்கது. இவ்வகையில் அவர்கள் மேலும் முயன்று பல வெற்றிகள் காண்பார்களென்று நம்புகிறோம்.

ங. குருசேவ் அமெரிக்காச் செலவு

கடந்த 15-9-59 இல் உருசிய தலைமை அமைச்சர் திரு. குருசேவ், அமெரிக்கக் குடியரசின் தலைவர் ஐசனோவரின் அழைப்பிற் கிணங்க அமெரிக்கத் தலைநகரான வாசிங்டனில் வந்திறங்கினார். திரு. ஐசனோவர் அவரை வரவேற்றார். திரு. குருசேவ் அமெரிக்காவில் சில நாட்கள் சுற்றுப்பயணம் செய்து பின் சீனநாட்டிற்குச் சென்றார். அமெரிக்கத் தலைவரும் உருசியத் தலைவரும் சந்தித்து உரையாடியதன் விளைவாக உலகப்போர் மீண்டும் ஏற்படா வண்ணம் அமைதி காக்கப் படும் என்று சொல்லப்படுகிறது.

குறிப்பு: இதனால் உலகின் இருபெரு வல்லரசுகளுக்குமிடையே இருந்துவரும் ஐயப்பாடுகளும் அச்சமும் நீங்கி அமைதிநிலவ வழியேற்படும் என நம்புகிறோம்.

௪. பிறஉலகங்களிலும் மக்கள்வாழக்கூடும்

நம்மைச் சூழஉள்ள வானவெளியில் ஏறக்குறைய 150, 000 கோள்கள் உள்ளன என்றும், அக்கோள்களில் மக்கள் குடியிருக்கக் கூடும் என்றும், அம்மக்கள் சாதாரண மனிதர்களைவிடச் சற்று உயர்நிலை அடைந்தவர்களாக இருக்கக் கூடுமென்றும் சோவியத் வானநூலறிஞரான பெலிக்ஸ் சேகால் என்பவர் நம்புகிறார். இச்செய்தியை மாஸ்கோ வானொலி அண்மையில் அறிவித்தது. திரு. சேகாலின் கருத்துப்படி அண்மையில் திங்கள் மண்டிலத்தை அடைந்ததுபோல் பிற உலகங்களையும் மனிதன் அடையக்கூடுமென்றும் சொல்லப்படுகிறது. இன்னும் சில ஆண்டுகளில் திங்கள்மண்டிலத்திற்குப் போக்குவரத்து ஏற்படக் கூடுமென்று மேலும் அந்த வானொலி அறிவித்தது.

குறிப்பு: உருசிய வானநூலறிஞர் திரு. சேகால் அவர்களின் முயற்சி அரிய முயற்சி. அம்முயற்சி வெற்றிபெற்று நம்பிக்கை செயல் முறையாக மாறும் நாள் வரும் என நம்புகிறோம்.

௫. இலங்கை முதலமைச்சர் மறைவு

கடந்த 25-9-59 காலை இலங்கை முதலமைச்சர் திரு. சாலமன் பண்டார நாயகா அவர்களை யாரோ ஒருவன் துப்பாக்கியால் சுட்டதன் விளைவாக மறுநாள் காலை மருத்துவவிடுதியில் அவர் காலமானார். சுட்டவன் சோமராம தேரோ என்பவன் என்று பின்னர் தெரியவந்தது. அவன் தற்போது காவலில் வைக்கப்பட்டுள்ளான். கொலை முயற்சி, கொலைக்குக் காரணம் முதலியன காவல்துறையினரால் ஆராயப்பட்டு வருகின்றன. மறைந்த முதலமைச்சருக்கு அகவை 60. அவருக்குப் பின் கல்வி அமைச்சரான விசயானந்தா தகநாயகா என்பவர் தலைமை அமைச்சராகப் பதவியேற்றுள்ளார். திரு. பண்டார நாயகாவின் பிரிவால் இலங்கை மக்கள் பெரிதும் வருந்துகின்றனர். உலகின் பல்வேறு நாட்டுத் தலைவர்களும், இந்திய அரசியல் தலைவர்களும் தங்கள் இரங்கலைத் தெரிவித்துள்ளனர்.

குறிப்பு: இலங்கை முதலமைச்சரின் மறைவு பெரிதும் வருந்தத் தக்கது. அன்னார் குடும்பத்தார்க்கும், இலங்கை மக்கட்கும் நமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

மணிவிழா மாண்பு

உயர்திரு. சிவபந்து டி. எஸ். ஸ்ரீபால் அவர்களின் அறுபதாம் ஆண்டு மணிவிழா 9-10-59 இல் சென்னை செயின்ட் மேரி மண்டபத்தில் நனிமிகச் சிறப்பாக நடந்தது.

திரு. பால் அவர்கள் சமயப் பெருந்தொண்டருடன் தமிழ்த் தொண்டருமாவர். சிற்றுயிர்க்குற்ற பேருறவினருமாவர். அவர்தம் விரிவான வரலாறும் நிழலுருவும் அடுத்த செல்வியில் வெளிவரும். மணி விழாப் பெருமாண்பார் ஸ்ரீபாலவர்களை மனமார வாழ்த்துகின்றோம்.

மதிப்புரை

"முருகன்"

இந்நூல் பழம்பெருந்தொன்மைத் தமிழகத் தனிமுதற் றெய்வமாம் திருமுருகனின் மூவாத் திருவரலாற்றினையும், அவன் திருக்கோவில் கொண்டெழுந்தருளியுறையும் திருவூர்களையும், அவன் திருவடியினைத் தொழுது வழிபட்டு இம்மை, உம்மை, அம்மையாகிய முத்திறப்பேறுகளையும் முறையுறப் பெற்றுய்ந்த மூதறிவாளர்களின் வரலாறுகளையும் தென்மொழி வடமொழி நூற்களின் துணைகொண்டு செவ்விதின் விளக்குகின்றன. மேலும் அப்பெருமானின் பலவகைத் திருப்படிமங்களின் அமைப்பும் திருக்கோவில்கள் கட்டவேண்டிய ஆகம நூன்முறையமைப்பும், கடவுண்மங்கலம் செய்யவேண்டிய முறைகளும், நாள்விழா, சிறப்பு விழா முதலியவற்றைச் செய்யத்தக்க முறைமைகளும், அப்பெருமானின் திருமந்திரங்கள் பலவும், அவற்றிற்குரிய பொருளுண்மைகளும், அவைகளை அழகுற அடைக்கப்பெற்ற பலவேறு சக்கரங்களும், சீருறக் காணப்படுகின்றன. புராணங்களை முழுக்கமுழுக்க அங்ஙனமே முற்றும் நம்புவாரும், ஒன்றுகூட உண்மையில்லை முற்றும் பொய்யென்பாரும் ஆகிய இருதிறத்தாருங் கொண்டுள்ள பெருமயக்கினை நூலாசிரியரவர்கள் தம் நுண்மாண் நுழைபுலத்திறத்தால் "கந்தபுராண தத்துவம்" என்னும் தலைப்பின்கீழ் மலைவற விரித்து விளக்கி அகற்றியுள்ளார்கள். இவ்விளக்கம் பொதுவாக உலகமாந்தர்க்கும் சிறப்பாக மாணவ ஆசிரியருலகத்துக்கும் மட்டிலாப் பெருந்துணையாம் என்பதுறுதி. இதன்கண் காணப்படும் திருமுருகன் திருவுருவங்கள் முற்றும் அப்பெருமானின் திருவருட்காட்சி நேரில் அளிப்பதுபோலமைந்துள்ளமை பெரிதும் போற்றற்குரியது. இக்காட்சி "முரணின ருட்க முருகாற்றுப் படுத்"தது போன்று தெய்வவுண்மையினைத் தேற்றுந் திருக்காட்சியாகும். இந்நூல் பொதுவாகச் செந்தமிழன்பர்களுக்கும் சிறப்பாகச் செந்நெறிச் செல்வர்கட்கும் ஆதீனத்தாரால் வழங்கப்படுந் திருவருட் செல்வமாகும்.

"நவமணிகள்"

இந்நூல் ஆசிரியர் திரு. T. S. வைத்தியநாதன் அவர்கள் ஆவர். ஓங்கிய ஒன்பான் ஒளிமணிக் கற்கள் தாங்குவார் தமக்கெலாம் பலப்பல நன்மைகளைத் தந்து வருகின்றன என்பது யாவருங் கைகண்டவுண்மையாகும். ஆனால் அம்மணிகளைப் பற்றிய தெளிவான வரலாற்று மெய்ம்மைகளை யாவர்களும் எளிதினுணரத் தக்க பெருநூல் ஒன்று இதுவரையும் வெளிவாராக் குறையினை இந்நூல் அகற்றியுள்ளது.

இதன்கண் தமிழ்நூல்கள். வடமொழிநூல்கள், ஆங்கில நூல்கள் முதலிய பல நூல்களினும் காணப்படும் உண்மைகளைப் பிழிந்தெடுத்துத் தொகுப்பாகத் தரப்பட்டுள்ளன. மேலும் இவ்வாசிரியர் அத்துறையின் வல்ல வணிகராகவும் விளங்குகின்றமையான் இந்நூல் தனிமாண் புள்ளதாக அமைந்து திகழ்கின்றது. இந்நூலுக்குச் சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர், சர். ஏ. எல். முதலியாரவர்களின் ஆங்கில மதிப்புரை அணிசெய்து ஆக்கந்தருகின்றது.

இந்நூல் இரண்டும் திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம் இருபத்தொன்றாவது குருமகா சந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ. சுப்பிர

மணிய தேசிக பரமாசாரிய சுவாமிகள் கட்டளையிட்டருளியபடி வெளி வருகின்றன. இவையிரண்டும் முறையே 123, 128 ஆகிய வெளியீட் டெண்களைக் கொண்டு திகழ்கின்றன. நூல்கள் அழகிய கட்டடமும் பதிப்பும் வாய்ந்தன. உள்ளுறை பொருள்களின் எழில்போன்று எல்லா வகையான புறவனப்புக்களும் ஒருங்கியைந்து ஒளிதிகழ்கின்றன. இவை இல்லங்களிலும் நூலகங்களிலும், திருக்கோவில்களிலும், திருமடங் களிலும் என்றும் நிலவவேண்டிய செல்வங்களாகும்.

"தென்மொழி"

இஃதோர் சிறந்த தனித்தமிழ்த்திங்கள் வெளியீடு. ஆசிரியர் **பெருஞ்சித்திரன்**. இதழ் ஒன்றக்குக் காசுகள் இருபத்தைந்து. நெல்லிக் குப்பம், தெ. ஆ. மாவட்டம் (தமிழ்நாடு). இவ்வெளியீடு பல சான்றோர் களின் சீரிய கட்டுரைகளைக்கொண்டு திகழ்கின்றது. ஆழ்ந்த துயிலிற் கிடக்கும் தமிழ் மக்களைத் தட்டியெழுப்பி உணர்ச்சியூட்டுந் தகைமையில் தனக்குத்தானே நிகரானது. மேலைநாட்டு மெய்யுணர்வுப் பெரியார் 'சாகரடீசு' போன்ருர் வரலாறு நன்முறையில் மொழிபெயர்த்து மிளிர் கின்றது. அம்முறையில் நம் பண்டைச் சங்கநூற் பாட்டுக்கள் ஆங்கில மொழி பெயர்ப்புடன் அழகுறத் திகழ்கின்றது. ஊக்கமும் உணர்ச்சியும், உரனும் ஊட்டும் ஆக்கத்தமிழ்ப் பாட்டுக்கள் புதிதாக வமைத்துப் புல னுயரப் புகட்டுமாறு காணப்படுகின்றன. எல்லாவகையானும் சாலச் சிறந்த இதனை வரவேற்கின்ருேம். வளர்ந்து பயன்நல்க வாழ்த்துகின் ருேம். செந்தமிழ் அன்பர்கள் இதனை வாங்கியும் வாங்குவித்தும் வண் பயன் எய்துவார்களாக. ஆசிரியரை ஊக்கி உறுதுணை செய்வார்களாக.

"பரமகுரு"

ஆசிரியர் S. T. இரத்தினம், நாசரேத், திருநெல்வேலி மாவட்டம். விலை அணு மூன்று. இந்நூல் கடவுள் ஒருவனே என்பதும் அவன் குருவாய் எழுந்தருளி ஆட்கொண்டருளுவன் என்பதும் பண்டைத் தமிழ்நூல் மேற்கோள்களுடன் நன்கு விளக்குகின்றது. ஆசிரியர் எல்லா நெறிகளின் மெய்ந்நூல்களையும் கற்றுள்ளவரென்பது காட்டும் மேற் கோள்களால் தெரியவருகின்றது. குருவின் இன்றியமையாமையை உணர்த்தும் இந்நூல் எல்லார்கையிலும் இருத்தற்குரிய தொன்ருகும்

இவ்வாசிரியரவர்கள் "நகையணிவது சரியா?" என்பது பற்றியும் ஒரு சிறுநூல் வெளியிட்டுள்ளார்கள் விலை அணு ஒன்று. இந்நூலின்கண் காந்தியடிகள் முதல் விவிலியநூற் பெரியார் ஈருகவுள்ள பலருடைய அறி வுரைகளும் நகையணிவது தீமையென்பதை விளக்குவன காட்டப்பட் டுள்ளன. மேலும் கடவுள் நம்பிக்கை, நல்லுளம், நல்லொழுக்கம், இயற் கையழகு இவைகளே தீங்கிலா அழகெனை வலியுறுத்தப்பட்டுள்ளன. இதனைக் கற்றுக் கைக்கொண்டு பெரும்பயன் எய்துவார்களாக.

குறிப்பு: எங்கும் கடவுளொன்றே ஈண்டும் பரமகுரு
அங்கங்கும் வெவ்வே றறி.

—ஆசிரியர்.

திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்காக, சென்னை 2-140, பிராட்வே,
அப்பர் அச்சகத்தில், திரு. வ. சுப்பையா அவர்களால்
அச்சிட்டு வெளியிடப்பெற்றது. ஆசிரியர் : வ. சுப்பையா.